Ours bank with
Bank of Baroda

# மதுரை மணி

Madurai Mani Tamil Evening Daily

தினசரி தமிழ் நாளிதழ் ®




ISO 9001:2015 / ISO 14001:2015: தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| மதுரை பதிப்பு | *மணி 55 | * ஓசை 256 | உள்ளூர் - 13.09.2026 | ஞாயிற்றுக்கிழமை | விலை ரூ.4/- | பக்கங்கள்-4 | Website : http://maduraimaninews.com |
| Madurai Edition | *Vol 55 | * Issue 256 | வெளியூர் - 14.09.2026 | திங்கட்கிழமை | Price Rs. 4/- | Pages -4 | Email: maduraimaninews@gmail.com |


**விநாயகர் சதுர்த்தி: 12 ராசிப்படி வழிபாடு...!**

**தமிழக சுகாதாரத்துறையில் 4724 நர்ஸ் பணியிடங்கள்!**

**தமிழ்நாடு அரசு ஊழியர்களுக்குக் கெடு!**

**அரசு ஊழியர்களுக்கு நவராத்திரியில் 'டீஏ ஹைக்'**

## மோடி மையத்தில்... உலகம் கவனித்த கைகோர்ப்பு!




புதுடெல்லி, செப்.13–

டெல்லியில் நடைபெற்ற BRICS வர்த்தக மாநாட்டில், பிரதமர் நரேந்திர மோடி, ரஷ்ய அதிபர் விளாடிமிர் புதின், ஈரான் அதிபர் மசூத் பெசெஷ்கியன் மற்றும் தென்னாப்பிரிக்க அதிபர் சிரில் ராமபோசா உள்ளிட்ட உலகத் தலைவர்களுடன் சிவப்புக் கம்பளப் பாதையில் கைகளை கோர்த்துக்கொண்டு இணைந்து நடந்து சென்றார்.

## இந்தியாவின் சோலார் செல் இறக்குமதிக்கு 126% வரி! அமெரிக்கா அறிவிப்பு!



வாஷிங்டன், செப். 13–

இந்தியா, இந்தோனேசியா, லாவோஸ் ஆகிய 3 நாடுகளில் இருந்து அமெரிக்காவில் இறக்குமதி செய்யப்படும் சோலார் செல்கள் மற்றும் பேனல்கள் மீதான பொருள் குவிப்புத் தடுப்பு வரம்பு, மானியத்தை ஈடுசெய்யும் வரி விகிதங்கள் ஆகியவற்றை அமெரிக்கா இறுதி செய்துள்ளது.

இதன்படி, அமெரிக்காவில் இந்திய உற்பத்தியாளர்களுக்கு பொருள் குவிப்பு தடுப்பு வரம்பு 123.04 சதவீதமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதேபோல இந்தோனேசிய உற்பத்தியாளர்களுக்கு 94.36 சதவீதம், லாவோஸ் உற்பத்தியாளர்களுக்கு 65.43 சதவீதம் பொருள் குவிப்பு தடுப்பு வரம்பு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. உற்பத்தியாளர்கள் தங்கள் பொருள்களை அமெரிக்காவில் அவற்றின் இயல்பான மதிப்பைவிட குறைந்த விலையில் விற்பதன் அடிப்படையில், இந்த வரம்பு கணக்கிடப்பட்டு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. பொருள் குவிப்புத் தடுப்பு வரியை நிர்ணயிப்பதில், இந்த வரம்பு முக்கியப் பங்கு வகிக்கிறது.

இதேபோல இந்த நாடுகளின் உற்பத்தியாளர்கள் தங்கள் அரசிடம் இருந்து பெறும் மானியம் காரணமாக, அமெரிக்காவில் குறைந்த விலையில் பொருள்களை விற்பனை செய்யும்போது, அந்நாட்டைச் சேர்ந்தவர்கள் குறைந்த விலை காரணமாக, அந்தப் பொருள்களையே வாங்க முன்வருவர். இதனால் உள்நாட்டு உற்பத்தியாளர்கள் பாதிக்கப்படக் கூடும். அவர்களின் நலனைப் பாதுகாக்கும் பொருட்டு, மூன்று நாடுகளின் உற்பத்தியாளர்கள் மானியத்தால் பெறும் நன்மையை சமன் செய்வதற்கான வரி விகிதத்தை அமெரிக்கா இறுதி செய்துள்ளது.

இதன்படி, இந்திய உற்பத்தியாளர்களுக்கு 126.09 சதவீதம், இந்தோனேசிய உற்பத்தியாளர்களுக்கு 73.2 சதவீதம் முதல் 173.7 சதவீதம் வரையும், லாவோஸ் உற்பத்தியாளர்களுக்கு 82.03 சதவீதம் முதல் 153.67 சதவீதம் வரையும் வரி விதிக்க முடிவு செய்யப்பட்டுள்ளதாக அமெரிக்க வர்த்தகத் துறை அறிவித்துள்ளது.

இந்த விவகாரத்தில் அமெரிக்கா உற்பத்தியாளர்களுக்கு இறக்குமதிகள் கணிசமான பாதிப்பை ஏற்படுத்தியுள்ளதா அல்லது பாதிப்பை ஏற்படுத்தும் அச்சுறுத்தல் உள்ளதா என்பது குறித்து அமெரிக்க சர்வதேச வர்த்தக ஆணையம் வரும் அக்.14–ஆம்தேதி இறுதி முடிவை எடுக்க உள்ளது. அப்போது இறக்குமதிகள் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளன அல்லது ஏற்படுத்தும் என்று அந்த ஆணையம் முடிவு செய்தால், வரி விதிப்பு குறித்த இறுதி உத்தரவுகளை வரும் நவம்பரில் அமெரிக்க வர்த்தகத் துறை பிறப்பிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## நைஜீரியா-கியூபா வெளியுறவு மந்திரிகளுடன் மத்திய மந்திரி ஜெய்சங்கர் சந்திப்பு!



புதுடெல்லி, செப். 13–

நைஜீரியா – கியூபா நாடுகளின் வெளியுறவு மந்திரிகளுடன் மத்திய மந்திரி ஜெய்சங்கர் சந்தித்து ஆலோசனை மேற்கொண்டார்.

டெல்லியில் உள்ள பாரத் மண்டபத்தில் கடந்த 11–ந்தேதி தொடங்கி 3 நாட்களுக்கு 18–வது பிரிக்ஸ் உச்சிமாநாடு நடைபெற்று வருகிறது. இதில், உறுப்பு நாடுகளின் தலைவர்கள், பிற நாடுகளின் தலைவர்கள், சர்வதேச அமைப்புகளின் தலைவர்கள் மற்றும் பிரதிநிதிகள் கலந்து கொண்டுள்ளனர்.

இதில் பங்கேற்பதற்காக பிரதமர் மோடி விடுத்த அழைப்பின் பேரில் பல்வேறு நாடுகளின் அதிபர்களும், தலைவர்களும் இந்தியாவுக்கு வருகை தந்துள்ளனர்.

இந்த மாநாட்டின் ஒரு பகுதியாக மத்திய வெளிவிவகார துறைக்கான மந்திரி ஜெய்சங்கர், நைஜீரிய நாட்டின் வெளியுறவு மந்திரி பியாங்கா ஒடுமெக்வு–ஒஜுக்வு மற்றும் கியூபாவின் வெளியுறவு மந்திரி புரூனோ ரோட்ரிகிஸ் பர்ரில்லா ஆகியோரை சந்தித்து ஆலோசனை மேற்கொண்டார்.

இதுபற்றி மத்திய மந்திரி ஜெய்சங்கர் வெளியிட்ட எக்ஸ் சமூக ஊடக பதிவில், நைஜீரிய நாட்டின் வெளியுறவு மந்திரி பியாங்கா ஒடுமெக்வு–ஒஜுக்வுவை சந்தித்து பேசியது மகிழ்ச்சி அளிக்கிறது. பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் மக்களிடையேயான உறவுகள் ஆகியவற்றை மையப்படுத்தி எங்களுடைய உரையாடல் இருந்தது என பதிவிட்டு உள்ளார்.

இதேபோன்று, கியூபாவின் வெளியுறவு மந்திரி புரூனோ ரோட்ரிகிஸ் பர்ரில்லாவை சந்தித்து ஆலோசனை மேற்கொண்டேன். தெற்கு பிராந்தியத்திற்கான ஒத்துழைப்பு பற்றிய கருத்துகளை பரிமாறிக்கொண்டோம் என்று அவர் தெரிவித்து உள்ளார்.




லண்டன்: லண்டனுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள முதல்வர் விஜய், அங்கு கார் பந்தயத்தில் பங்கேற்ற நடிகர் அஜித் குமார்உடன் ஆரத்தழுவி அன்பை பரிமாறிய சம்பவம் ரசிகர்களை நெகிழச் செய்துள்ளது. நடிகரும் கார் ரேஸருமான அஜித் குமார் பங்கேற்கும் பிரிட்டன் கார் பந்தயத்தை முதல்வர் விஜய்யுடன் நடிகை த்ரிஷா நேரில் கண்டு ரசித்தார்.

## இந்தியப் பெருங்கடலில் மும்மடங்கு புயல் அபாயம்!

# அக். டிசம்பரில் 3 தீவிர புயல்கள் உருவாக வாய்ப்பு!

# 44 ஆண்டு சராசரியைவிட 83% அதிக தீவிரம்!

## கடலோரப் பகுதிகள் உஷார் – அவசரகதியில் பேரிடர் தடுப்பு!!



சென்னை, செப். 13–

வடக்கு இந்திய பெருங்கடலில் வருகிற அக்டோபர் முதல் டிசம்பர் வரை 3 கடுமையான புயல்கள் உருவாகி பெரிய பாதிப்பை ஏற்படுத்த வாய்ப்பு உள்ளது' என்று இஸ்ரோ விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் (இஸ்ரோ). கடற்பகுதிகளில் தீவிர வானிலை மாற்றம் குறித்து ஒரு முக்கியமான எச்சரிக்கையை வெளியிட்டுள்ளது. அதாவது அடுத்த மாதம் (அக்டோபர்) முதல் டிசம்பர் வரை அரபிக்கடல் மற்றும் வங்கக்கடல் பகுதிகளில் கடுமையான தாக் கத்தை ஏற்படுத்தக்கூடிய புயல்கள் உருவாக வாய்ப்பு உள்ளது. இந்த காலகட்டத்தில் வடக்கு இந்தியப் பெருங்கடல் பகுதியில் 3 தீவிர புயல் உருவாகக்கூடும் என்று கணிக்கப்பட்டுள்ளது.

இந்த முறை உருவாகும் புயல்களின் வேகம் கடந்த 44 ஆண்டுகளில் காணப்பட்ட இயல்பான சராசரியை விட 'ஆற்றல் விரயக்குறியீடு' படி 13.06 மில்லியன் நாட்ஸ் அளவை எட்டும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இது 7.15 மில்லியன் நாட்ஸ் என்ற வரலாற்று சராசரி அளவை விட 83 சதவீதம் அதிகமாகும். ஒடிசா, வடக்கு ஆந்திர பிரதேசம் மற்றும் மேற்கு வங்காளம் போன்ற கட லோரப் பகுதிகள், கடும் காற்று, தீவிரமான புயல் அலைகள் மற்றும் 200 முதல் 300 மில்லி மீட்டருக்கும் அதிகமான கனமழை ஆகியவற்றால் ஏற் படும் அதிக ஆபத்தை எதிர்கொள்ள வாய்ப்பு உள்ளது என்று இஸ்ரோ வின் செயற்கைக்கோள் தரவுகள் மற்றும் வானிலை ஆய்வு முடிவுகள் சுட் டிக்காட்டுகின்றன. 'இருமடங்கு தீவிரத்தன்மை' கொண்ட இந்த புயல்கள் வட இந்தியப் பெருங்கடலைத் தாக்கக்கூடும் என்ற தகவல், அரசுகள், பேரிடர் மேலாண்மை அமைப்புகள் மற்றும் வானிலை ஆய்வாளர்கள் என அனைத்துத் தரப்பினரிடையேயும் பெரும் கவலையை ஏற்படுத்தி யுள்ளது. புயல்களின் தீவிரத்தன்மை மற்றும் காற்றில் உள்ள ஈரப்பதம், காற்றின் வேகம் ஆகியவற்றை கணக்கிடும் முறையின்படி, இந்த ஆண்டு தாக்கும் புயல்கள் அதிக அழிவை ஏற்படுத்தும் ஆற்றலைக் கொண்டுள்ளன.

ஆற்றல் இழப்பு குறியீடு' மூலம் அளவிடப்பட்டதில். இவற்றின் ஒட்டு மொத்த வலிமையானது தெரியவந்துள்ளது. அனைத்து கடலோர மாநிலங் களுக்கும், பேரிடர் மேலாண்மை அமைப்புகளுக்கும் இஸ்ரோ முக்கிய எச்சரிக்கையை விடுத்துள்ளது. இதனால் கடலோர மாவட்டங்கள் மற்றும் மாநில அரசுகள் உஷார்படுத்தப்பட்டுள்ளன என்று இஸ்ரோ விஞ்ஞானிகள் கூறினர்.

## மீனாட்சி சுந்தரேசுவரர் கோயில் குடமுழுக்கு: பக்தர்களின் வாகன நிறுத்த இடங்கள் அறிவிப்பு!



மதுரை, செப். 13–

மதுரை மீனாட்சிசுந்தரேசுவரர் கோயிலில் குடமுழுக்கு விழா நடைபெறுவதை முன்னிட்டு, வருகிற 17–ஆம் தேதி மதுரையில் பக்தர்கள் வாகனங்கள் நிறுத்துமிட விவரம் அறிவிக்கப்பட்டது.

இதுகுறித்து மதுரை மாநகரக் காவல் ஆணையர் அலுவலகம் வெளியிட்ட செய்திக் குறிப்பு: மதுரை அண்ணா சிலை சந்திப்பு வழியாக குடமுழுக்கு விழாவைக் காண்பதற்காக கோபுர மேல் தளத்துக்குச் செல்லும் அனுமதி அடையாள அட்டை வைத்துள்ள பக்தர்கள் கீழ வெளி வீதி நெல்பேட்டை, அம்சவல்லி சந்திப்பு வழியாக ஏற்பாடு செய்யப்பட்ட வாகன நிறுத்துமிடத்தில் வாகனங்களை நிறுத்திவிட்டு கோயிலுக்குச் செல்ல வேண்டும்.

அண்ணா சிலை சந்திப்புக்கு வாகனங்கள் செல்ல முடியாமல் போக்குவரத்து நெருக்கடி ஏற்படும் சூழ்நிலையில், தல்லாகுளம் கருப்பணசாமி கோயில் சந்திப்பு, நேதாஜி பாலம் அணுகு சாலை, தமுக்கம் சந்திப்பு– கோரிப்பாளையம் சந்திப்பு– மூங்கில் கடை தெரு, தேனி ஆனந்தம் வழியாக குடமுழுக்கு விழாவைக் காண்பதற்காக கோபுர மேல் தளத்துக்குச் செல்லும் அனுமதி அடையாள அட்டை வைத்துள்ள பக்தர்கள் வைகை வடகரை சாலை, தென்கரை ஓபுளா படித் துறை சந்திப்பு இஸ்மாயில்புரம் வழியாக கீழவெளி வீதி அம்சவல்லி சந்திப்பு சென்று அங்கு ஏற்பாடு செய்யப்பட்ட வாகன நிறுத்துமிடத்தில் வாகனங்களை நிறுத்திவிட்டு கோயிலுக்குச் செல்ல வேண்டும்.

கே.கே.நகர் சந்திப்பு, குருவிக்காரன் சாலை, முனிச் சாலை சந்திப்பு வழித்தடம் தமுக்கம் சந்திப்புக்கு வாகனங்கள் செல்ல முடியாமல் போக்குவரத்து நெருக்கடி ஏற்படும் சூழ்நிலையில், தல்லாகுளம் அவுட் போஸ்ட் வழியாக குடமுழுக்கு விழாவைக் காண்பதற்காக கோபுர மேல் தளத்துக்குச் செல்லும் அனுமதி அடையாள அட்டை வைத்துள்ள பக்தர்கள் அவுட் போஸ்ட், மாவட்ட நீதிமன்றம், ஆவின் சந்திப்பு, அரவிந்த் கண் மருத்துவமனை சந்திப்பு, குருவிக்காரன் சாலை சிக்னல் சந்திப்பு வழியாக வந்து காமராஜர் சாலை, கீழ வெளிவீதியில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள வாகன நிறுத்துமிடங்களில் வாகனங்களை நிறுத்திவிட்டு கோயிலுக்குள் செல்ல வேண்டும்.

மேற்கண்ட காமராஜர் சாலை, கீழவெளி வீதியில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள வாகன நிறுத்துமிடங்களில் வாகனங்கள் நிறைவு ஏற்பட்ட பிறகு, அதன் பின் வருகிற வாகனங்கள் தெற்குவெளி வீதி, தெற்கு மாரட் வீதி, கட்டபொம்மன் சிலை சந்திப்பு ஆகிய இடங்களில் ஏற்பாடு செய்யப்பட்ட வாகன நிறுத்துமிடங்களில் தங்களது வாகனங்களை நிறுத்தம் செய்துவிட்டு கோயிலுக்குச் செல்ல வேண்டும்.

இந்த வாகன நிறுத்துமிட ஏற்பாட்டுக்கு பக்தர்கள் முழு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என அதில் குறிப்பிடப்பட்டது.

# தலையங்கம்

மதுரை மணி
ஞாயிற்றுக்கிழமை 13.09.2026
விசுவாவசு தமிழ் வருடம்
ஆவணி மாதம் 27-ம் தேதி

## பாக்கெட் உணவு: எச்சரிக்கை லேபிள் இனியும் தாமதிக்கலாமா?



பாக்கெட் உணவுகளில் அதிக சர்க்கரை, உப்பு, கொழுப்பு இருப்பதை நுகர்வோருக்கு எச்சரிக்கும் 'Front-of-Pack' லேபிள்களை கட்டாயமாக்குவது தொடர்பான வழக்கு உச்ச நீதிமன்றத்தில் விசாரணையில் உள்ளது. இதற்காக FSSAI முன்வைத்துள்ள 'சிவப்பு அறுகோண' எச்சரிக்கை லேபிள் திட்டம் மற்றும் அதை இரண்டு கட்டங்களாக அமல்படுத்தும் முறையில் பல அம்சங்கள் தெளிவாக இல்லை என்று சுட்டிக்காட்டிய நீதிமன்றம், 13 முக்கியக் கேள்விகளுக்கு 10 நாட்களுக்குள் பிரமாணப் பத்திரம் மூலம் பதிலளிக்க FS-SAI-க்கு உத்தரவிட்டுள்ளது. வழக்கின் அடுத்த விசாரணை செப்டம்பர் 28-ஆம் தேதி நடைபெற உள்ளது.

பாக்கெட் உணவுகளில் அதிக சர்க்கரை, உப்பு, கொழுப்பு போன்றவை இருப்பதை நுகர்வோர் எளிதில் அறிந்துகொள்ளும் வகையில் எச்சரிக்கை லேபிள் இடம்பெற வேண்டும் என்பது நீண்டகாலமாக எழுப்பப்படும் கோரிக்கை. பொதுமக்களின் ஆரோக்கியம், குறிப்பாக குழந்தைகளின் நலன் சம்பந்தப்பட்ட விவகாரம் என்பதால் உச்ச நீதிமன்றத்தின் தற்போதைய தலையீடு முக்கியத்துவம் பெறுகிறது.

**எந்த உணவுக்கு எவ்வளவு சத்து வரம்பு நிர்ணயிக்கப்படும்?**

மொத்த சர்க்கரை, நிறைவுற்ற கொழுப்பு, டிரான்ஸ் கொழுப்பு ஆகியவை எவ்வாறு கணக்கிடப்படும்? மிதமாகப் பதப்படுத்தப்பட்ட உணவுக்கும் அதிகமாகப் பதப்படுத்தப்பட்ட உணவுக்கும் வேறுபாடு காட்டப்படுமா? குளிர்பானங்கள் எவ்வாறு வகைப்படுத்தப்படும்? என்பன போன்ற அடிப்படையான கேள்விகளை நீதிமன்றம் எழுப்பியுள்ளது.

எச்சரிக்கைக்காகத் தேர்வு செய்யப்பட்டுள்ள சிவப்பு நிறம் இந்திய நுகர்வோரிடம் அசைவ உணவைக் குறிக்கும் நிறமாக ஏற்கெனவே அறியப்பட்டுள்ள நிலையில், அதனை மறுபரிசீலனை செய்ய வேண்டுமா என்ற கேள்வியும் முக்கியமானது. லேபிளின் அளவு, எழுத்துரு, பாக்கெட்டின் அளவுக்கு ஏற்ப அது மாறுமா என்பதற்கும் தெளிவான விதிமுறைகள் அவசியம்.

**குழந்தைகளுக்குப் புரிய வேண்டும்!**

ஒரு உணவுப் பொருளில் அதிக சர்க்கரை, உப்பு அல்லது கொழுப்பு உள்ளது என்பதை குழந்தைகளும், வெவ்வேறு கல்வி மற்றும் வாசிப்புத் திறன் கொண்டவர்களும் எளிதாகப் புரிந்துகொள்ளும் வகையில் எச்சரிக்கை லேபிள் அமைந்திருக்க வேண்டும்.

பள்ளிப் பாடத்திட்டங்கள், பட்டறைகள் மற்றும் செயல்பாடுகள் மூலம் பாக்கெட் உணவு லேபிள்களைப் புரிந்துகொள்ளும் ஊட்டச்சத்துக் கல்வியை மாணவர்களிடம் எவ்வாறு கொண்டு செல்லப் போகிறோம் என்பதும் முக்கியமான கேள்வியாகும். நிறுவனங்களுக்கு விதிகளைப் பின்பற்ற கால அவகாசம் வழங்கப்படுமா, புதிய விதிகளால் செயற்கைப் பதப்படுத்திகள் மற்றும் கூழ்மப்பிரிப்பான்களின் பயன்பாடு அதிகரிக்குமா என்பதற்கும் தெளிவான பதில் தேவை.

மக்களின், குறிப்பாக வளரும் குழந்தைகளின் ஆரோக்கியம் தொடர்பான விஷயத்தில் தேவையற்ற தாமதத்திற்கு இடமிருக்கக் கூடாது. எச்சரிக்கை லேபிள் வெறும் அடையாளமாக இல்லாமல், ஒரு பாக்கெட்டை வாங்குவதற்கு முன்பே அதில் உள்ள ஆரோக்கிய அபாயத்தை சாதாரண நுகர்வோருக்கும் புரிய வைக்கும் எச்சரிக்கையாக அமைய வேண்டும். இந்த வழக்கில் உச்ச நீதிமன்றம் எழுப்பிய கேள்விகளுக்கு FSSAI அளிக்கப்போகும் பதில்களும், செப்டம்பர் 28-ஆம் தேதி நடைபெறும் அடுத்த விசாரணையும், இந்தியாவில் பாக்கெட் உணவுகளுக்கான எச்சரிக்கை லேபிள் நடைமுறையின் அடுத்த கட்டத்தைத் தீர்மானிப்பதில் முக்கியத்துவம் பெறும்.

## முதியோர் உதவித்தொகை 15-ந் தேதி உறுதியாக வழங்கப்படும் - அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையன்!



ஈரோடு, செப். 13-

ஈரோடு மாவட்டம் நம்பியூர் அருகே உள்ள காளியப்பம்பாளையத்தில் வருவாய்த்துறை அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையன் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:- முதல்-அமைச்சர் விஜய்யின் நேரடி கண்காணிப்பில் இருப்பதால் கல்வித்து றையில் அனைத்து திட்டங்களும் சிறப்பாக செயல்படுத்தப்படும். தமிழ்நாட்டில் முதியோர் உதவித்தொகை நிறுத்தி வைக்கப்படவில்லை. 5 லட்சம் பேருக்கு வரவில்லை என்று கூறப்படுகிறது.

அந்த திட்டத்துக்கு மத்திய அரசு பெயரை மாற்றி இருக்கிறது. இதேபோல் கணவனால் கைவிடப்பட்ட பெண்களுக்கான உதவித்தொகை, கைம்பெண் உதவித்தொகை மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கான உதவித்தொகை என ஏறத்தாழ 27 ஆயிரத்து 412 பேருக்கு இன்னும் வழங்கப்படவில்லை.

இதுகுறித்து மத்திய அரசுக்கு பரிந்துரை செய்து இருக்கிறோம், விடுமுறை நாட்கள் வந்துவிட்டதால் விநா யகர் சதுர்த்தி முடிந்து, மறுநாள் (அதாவது வருகிற 15-ந் தேதி) வழங்க உறுதியாக நடவடிக்கை எடுக்கப்படும். இடைத்தேர்தலை பொறுத்தவரை த.வெ.க. மாபெரும் வெற்றி பெறும். நாம் எங்கே சென்றாலும் அங்கே வெற்றிதான். மற்ற தொகுதிகளுக்கு வருகிற 28-ந் தேதி அன்று தீர்ப்பு வழங்க இருக்கிறார்கள். தீர்ப்பு கிடைத்தவுடன், தேர்தல் ஆணையம் குறிப் பிட்ட நாளில் தேர்தலை அறிவிக்கும். இவ்வாறு அவர் கூறினார்.

# விநாயகர் சதுர்த்தி: சென்னையில் 14 புதிய சோதனைச் சாவடிகள், கூடுதலாக 2,000 போலீசார் பாதுகாப்பு!

சென்னை, செப். 13-



விநாயகர் சதுர்த்தி விழாவை முன்னிட்டு சென்னையில் கூடுதலாக 14 இடங்களில் புதிய சோதனைச் சாவடிகள் மற்றும் கூடுதலாக 2,000 போலீஸார் சனிக்கிழமை இரவு முதலே பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர்.

நிகழாண்டு நாடு முழுவதும் வரும் செப். 14-ஆம் தேதி விநாயகர் சதுர்த்தி விழா கொண்டாடப்பட உள்ளது. இதையடுத்து, ஹிந்து அமைப்புகள், சமூக நல அமைப்புகள், குடியிருப்பு சங்கங்கள் ஆகியவை பொது இடங்களில் விநாயகர் சிலைகளை நிறுவதற்குரிய ஏற்பாடுகளைச் செய்து வருகின்றன. அதேவேளை, விநாயகர் சதுர்த்தியையொட்டி பாதுகாப்பு பணிகளையும் போலீஸார் தீவிரப்படுத்தியுள்ளனர். சிலைகள் வைக்கப்படும் இடங்கள், ஊர்வலப் பாதைகள், சிலை கரைப்பு நடைபெறும் பகுதிகள் ஆகியவற்றில் போலீஸார் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டு வருகின்றனர். அதன் ஒரு பகுதியாக சென்னை முழுவதும் கூடுதலா 14 இடங்களில் புதிய சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன. அதன்மூலம், வாகனத் தணிக்கை, விதிகளுக்குட்பட்டு சிலைகள் நிறுவப்படுகிா, அனுமதிக்கப்பட்ட இடங்களில் சிலைகள் கரைப்படுகிா என்பது கண்காணிக்கப்படுகிறது.

மேலும், விழாவையொட்டி எவ்வித அசம்பாவிதங்களும் நிகழாத வண்ணம் கூடுதலா 2,000 போலீஸார் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். கூட்ட நெரிசல் ஏற்படும் பகுதிகளில் போக்குவரத்தை ஒழுங்குபடுத்தவும், ஊர்வலங்களின்போது பாதுகாப்பை உறுதி செய்யவும் சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

# பலமடங்கு கட்டண வசூல் புகார்! 400 ஆம்னி பேருந்துகளுக்கு அபராதம்!

சென்னை, செப். 13-



செப். 10 முதல் 12-ஆம் தேதி அதிகாலை வரை தமிழகம் முழுவதும் 2,379 ஆம்னி பேருந்துகள் தணிக்கை செய்யப்பட்டன. அப்போது, பேருந்து களில் பயணம் செய்தவர்களிடம் நேரடி யாக கட்டணம் குறித்து விசாரணை நடத்தப்பட்டது. கூடுதல் கட்டணம் வசூலித்தது கண்டறியப்பட்ட இடங்களில், பயணிகளிடம் வசூலிக்கப்பட்ட கூடுதல் தொகையைத் திருப்பி வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இந்தத் தணிக்கையில் 400 ஆம்னி பேருந்துகளில் விதிமீறல்கள் கண்டறியப்பட்டன. அந்தப் பேருந்துகளுக்கு தணிக்கை அறிக்கை, மின்னணு அபராதச் சீட்டு வழங்கப்பட்டதுடன், வாகன உரிமையாளர்களிடம் விளக்கம் கோரி நோட்டீஸ் வழங்கப்பட்டது. விதிமீறல்களுக்காக ரூ.10,31,500 இணக்கக் கட்டணம் (அபராதம்) நிர்ணயிக்கப்பட்டு, இதில் ரூ.1,60,500 உடனடியாக வசூலிக்கப்பட்டது.

மேலும், பிற மாநிலங்களில் பதிவு செய்யப்பட்டு தமிழகத்தில் இயக்கப்பட்ட ஆம்னி பேருந்துகளிடமிருந்து தமிழகத்துக்கு செலுத்த வேண்டிய வரியாக ரூ.15,33,220 வசூலிக்கப்பட்டுள்ளது.

**4 வெளிமாநில பேருந்துகள் சிறைபிடிப்பு:** தகுதிச் சான்றிதழ் இல்லாமலும், உரிய சாலை வரி செலுத்தாமலும் இயக்கப்பட்ட 4 வெளிமாநில ஆம்னி பேருந்துகள் சிறைபிடிக்கப்பட்டன. அந்தப் பேருந்துகளில் பயணம் செய்த பயணிகளுக்கு உடனடியாக மாற்றுப் பேருந்துகள் ஏற்பாடு செய்யப்பட்டு, அவர்கள் சொந்த ஊர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

**அமைச்சர் அறிவுறுத்தல்:** பண்டிகை மற்றும் தொடர் விடுமுறை காலங்களில் கூடுதல் கட்டணம் வசூலிப்பது, அனுமதி, வரி, தகுதிச் சான்றிதழ் உள்ளிட்ட விதிமீறல்களைத் தடுக்க செப். 16 வரை தமிழகம் முழுவதும் சிறப்பு வாகனத் தணிக்கையை தீவிரமாக மேற்கொள்ள போக்குவரத்துத் துறை அமைச்சர் ஆ.விஜய் தமிழன் பார்த்திபன் அறிவுறுத்தியுள்ளார்.

மேலும், ஆன்லைனில் முன்பதிவு செய்யப்பட்ட பயணச்சீட்டை ஆம்னி பேருந்து உரிமையாளர் ரத்து செய்யும் நிலையில், சம்பந்தப்பட்ட பயணிகள் மாற்றுப் பேருந்தில் பயணம் செய்ய உரிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்; அவ்வாறு செய்யத் தவறினால் சம்பந்தப்பட்ட ஆம்னி பேருந்து மீது நடவடிக்கை எடுக்கப்படும் என போக்குவரத்துத் துறை தெரிவித்துள்ளது.

**கிளாம்பாக்கத்தில் தொடர் கண்காணிப்பு:** செப். 16 வரை பயணி களின் தேவைக்கேற்ப பேருந்துகள் தடையின்றி இயக்கப்படுவதை உறுதி செய்ய கிளாம்பாக்கம் பேருந்து முனையத்தில் அரசுப் போக்குவரத்துக் கழகங்களின் பொது மேலாளர்கள், துணை மேலாளர்கள் தொடர் கண்கா ணிப்பில் ஈடுபட உத்தரவிடப்பட்டுள்ளது.

தமிழகம் முழுவதும் முக்கிய பேருந்து நிலையங்களில் பயணிகளின் எண்ணிக்கை தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு, தேவைக்கேற்ப கூடுதல் அரசு சிறப்புப் பேருந்துகளை உடனடியாக இயக்கவும் போக்குவரத்துக் கழகங்களின் மேலாண் இயக்குநர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. இதற்காக பொது மேலாளர்கள், துணை மேலாளர்கள் மற்றும் பணிமனை மேலாளர்கள் நேரடிக் கண்காணிப்பு மற்றும் ஒருங்கிணைப்புப் பணிகளில் ஈடுபட்டு வருவதாக போக்குவரத்துத் துறை தெரிவித்துள்ளது.

# தி லிட்டில் ப்ளவர் பள்ளியில் ஆசிரியர் தின விழா சிறப்பு நிகழ்ச்சி!




ஆண்டிபட்டி, செப் 13-

தேனி மாவட்டம், ஆண்டிபட்டியில் அமைந்துள்ள தி லிட்டில் ப்ளவர் பள்ளியில், "பெற்றோர்களை கொண்டாடுவோம்!" என்ற சிறப்பு நிகழ்ச்சி ஆசிரியர்கள், பெற்றோர்கள் மற்றும் மாணவர்கள் இணைந்து ஆசிரியர் தின விழாவாக சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

இவ்விழா பள்ளியின் தாளாளர் ஹென்றி அருளானந்தம் மற்றும் தாளாளர் மனைவி தமயந்தி ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. விழாவின் சிறப்பு விருந்தினராக ஆர். பெருமாள்சாமி (முதன்மை கல்வி அலுவலக நேர்முக உதவியாளர்) கலந்து கொண்டு, ஆசிரியர்களின் சிறப்பையும், கல்வித்துறையில் ஆசிரியர்களின் அர்ப்பணிப்பு மற்றும் பங்களிப்பையும் எடுத்துரைத்தார்.

மேலும் செந்தில் குமார் (முன்னாள் கண்காணிப்பாளர், முதன்மை கல்வி அலுவலகம்) அவர்களும் விழாவில் பங்கேற்றுக் கொண்டு சிறப்புரையாற்றினார். பள்ளியின் செயலாளர் மேத்யூ ஜோயல் ஆசிரியர்களின் சிறப்பைப் போற்றும் வகையில் சிறப்புரையாற்றினார். பள்ளியின் முதல்வர் உமாமகேஸ்வரி மாணவர்களின் கல்வி மற்றும் வாழ்க்கை முன்னேற்றத்தில் ஆசிரியர்களின் முக்கியப் பங்கு குறித்து உரையாற்றினார்.

விழாவின் சிறப்பம்சங்களாக ஆசிரியர்களின் சிறப்பு நடன நிகழ்ச்சிகள், பல்வேறு கலை நிகழ்ச்சிகள் மற்றும் மாணவர்களின் நடன நிகழ்ச்சிகள் நடைபெற்றன. நிகழ்ச்சிகள் அனைவரையும் வெகுவாகக் கவர்ந்தன.

சுதந்திர தின விழா போட்டிகளில் கலந்து கொண்டு வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன.

விழாவில் கலந்து கொண்ட பெற்றோர்கள் அனைவருக்கும் அன்பளிப்பும் மதிய உணவும் வழங்கப்பட்டது. ஆசிரியர்களுக்கு சிறப்பு பரிசுகள் மற்றும் கேக்குகள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

விழாவிற்கான அனைத்து ஏற்பாடுகளையும் பள்ளியின் கல்வி ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் ஆசிரியர்கள் ஒருங்கிணைந்து சிறப்பாக மேற்கொண்டனர். ஆசிரியர்கள், பெற்றோர்கள் மற்றும் மாணவர்கள் ஒன்றிணைந்து கொண்டாடிய இவ்விழா, பள்ளியின் ஒற்றுமையையும் கல்விச் சமூகத்தின் அன்பையும் வெளிப்படுத்தும் வகையில் அமைந்துள்ளதாக அனைவரும் பாராட்டினார்கள்.

# அரசியல் மேடைகளில் கண்ணியம் தவறும் திமுகவினர்: சிபிஎம் மாநில செயலாளர் பெ.சண்முகம் கண்டனம்!

சென்னை, செப். 13-



அமைச்சர் சி.டி.ஆர்.நிர்மல் குமாரின் தாயாரைக் குறிப்பிட்டு திமுக துணைப் பொதுச்செயலாளரும் எம்பியுமான ஆ.ராசா பேசிய பேச்சு வன்மையான கண்டனத்திற்குரியது.

சட்டமன்றத்தில் முதலமைச்சர் விஜய்யின் பேச்சுக்கு பலர் விமர்சனங்களை முன்வைத்து வருகின்றனர். தமிழக அரசியலில் மிசா கொடுமைகள் பற்றிய விவாதமும் எழுந்துள்ளது. இந்த நிலையில், விஜய் திமுக தலைவர் ஸ்டாலினின் தியாகத்தைக் கொச்சைப்படுத்திவிட்டதாகக் கூறி, திமுகவினர் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் போராட்டங்களை நடத்தினர்.

சென்னை சைதாப்பேட்டையில் நடைபெற்ற போராட்டத்தில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்கள் பலர் கலந்துகொண்டனர். அப்போது கூட்டத்தில் ஆ.ராசா பேசிய கருத்து சர்ச்சையை ஏற்படுத்தியது. ஆ.ராசாவின் பேச்சைக் கடுமையாகச் சாடி, திமுக தலைவர் மு.க.ஸ்டாலினுக்குச் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் (சிபிஎம்) தமிழ் மாநிலச் செயலாளர் பெ.சண்முகம் கண்டனம் தெரிவித்துள்ளார்.

அமைச்சர் சி.டி.ஆர்.நிர்மல் குமாரின் தாயாரைக் குறிப்பிட்டு திமுக துணைப் பொதுச்செயலாளரும் எம்பியுமான ஆ.ராசா பேசிய பேச்சு வன்மையான கண்டனத்திற்குரியது என பெ. சண்முகம் தெரிவித்துள்ளார். அரசியல் மேடைகளில் கொள்கை ரீதியான விமர்சனங்களைத் தாண்டி, தனிப்பட்ட நபர்களின் குடும்பத்தினரையும் பெண்களையும் கொச்சைப்படுத்திப் பேசுவது சகித்துக் கொள்ள முடியாதது என்று அவர் சுட்டிக்காட்டினார்.

திமுகவின் முன்னணி தலைவர்கள் பலர் சமீபகாலமாகக் பொதுவெளியிலும் மேடைகளிலும் பேசும்போது கண்ணியம் தவறி பெண்களை இழிவுபடுத்திப் பேசுவது தொடர்ந்து வாடிக்கையாகி வருகிறது. மாற்றுக் கட்சியினரின் தாயாரைக் குறிவைத்துத் தாக்குவதும், ஆபாசமான வார்த்தைகளைப் பயன்படுத்துவதும் தமிழ்நாட்டின் அரசியல் நாகரிகத்திற்கே பெரும் அச்சுறுத்தலாக உள்ளது.

மாற்றுக் கட்சியினரின் தாயாரையும் பெண்களையும் இழிவுபடுத்திப் பேசுபவர்கள் மீது திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் வேடிக்கை பார்க்காமல் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும். சொந்தக் கட்சியின் மூத்த நிர்வாகிகளின் பேச்சில் கட்டுப்பாட்டை நிலைநிறுத்தும் கடமையை திமுக தலைவர் நிறைவேற்றுவார் என்றும், இத்தகைய அவதூறு பேச்சுகளுக்கு முற்றுப்புள்ளி வைப்பார் என்றும் நம்புவதாக பெ. சண்முகம் வலியுறுத்தியுள்ளார்.



# விநாயகர் சதுர்த்தி: 12 ராசிப்படி வழிபாடு... சிறப்பு பலன்!



இந்து தர்மத்தில் எந்தவொரு மங்கல காரியத்தைத் தொடங்கினாலும், முழுமுதற் கடவுளான விநாயகரை முதலில் வழிபடுவது தொன்றுதொட்டு வரும் மரபாகும். விநாயகரை எந்த வடிவத்தில் வழிபட்டாலும் நற்பலன்கள் கிடைக்கும் என்றாலும், ஜோதிட ரீதியாக ஒவ்வொரு ராசிக்கும் குறிப்பிட்ட கணபதி வடிவம் உரியதாகக் கூறப்படுகிறது. அந்த விநாயகரை வழிபட்டு, உரிய மந்திரங்களை ஜெபிப்பது சிறப்பான பலன்களைத் தரும் என்பது ஆன்மிக நம்பிக்கை.

**எந்த ராசிக்கு எந்த விநாயகர்?**

| ராசி | வழிபட வேண்டிய விநாயகர் |
| --- | --- |
| மேஷம் | சம்மந்த விநாயகர் |
| ரிஷபம் | சித்தி புத்தி விநாயகர் |
| மிதுனம் | த்விஜ கணபதி |
| கடகம் | ஹரித்ரா கணபதி |
| சிம்மம் | வலம்புரி கணபதி |
| கன்னி | கன்னி மூல கணபதி |
| துலாம் | லட்சுமி கணபதி |
| விருச்சிகம் | விஜய கணபதி |
| தனுசு | ஞான கணபதி |
| மகரம் | வீர கணபதி |
| கும்பம் | உத்தண்ட கணபதி |
| மீனம் | நர்த்தன கணபதி |

விநாயகர் சதுர்த்தி, சங்கடஹர சதுர்த்தி, மாத சதுர்த்தி விரத நாட்கள், புதன்கிழமை மற்றும் ஜன்ம நட்சத்திர நாளில், தங்களுக்குரிய விநாயகரை வழிபட்டு மந்திரத்தை 108 முறை பாராயணம் செய்வது காரியத் தடைகளை நீக்கி வெற்றிக்கு வழிவகுக்கும் என்று ஆன்மிக நூல்கள் கூறுகின்றன.

ராசி அல்லது நட்சத்திரம் தெரியாதவர்கள்,

"ஓம் ஏக தந்தாய வித்மஹே,
வக்ர துண்டாய தீமகி,
தன்னோ தந்தி ப்ரஜோதயாத்"

என்ற விநாயகர் காயத்ரி மந்திரத்தை தினமும் ஜெபிக்கலாம். இதனால் புத்திக் கூர்மை, ஞானம் மற்றும் காரிய வெற்றி கிடைக்கும் என்பது ஆன்மிக நம்பிக்கை.

# தென்காசி அருகே அரசுப் பேருந்து ஆற்றுக்குள் கவிழ்ந்து விபத்து: 30 பயணிகள் படுகாயம்!



தென்காசி, செப். 13-

தென்காசி அருகே வேட்டைக்காரன் குளம் பகுதியில் அரசுப் பேருந்து ஆற்றுக்குள் கவிழ்ந்த விபத்தில் 30 பயணிகள் படுகாயம் அடைந்தனர். காயமடைந்தவர்களுக்கு தென்காசி அரசு மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கப்படுகிறது.

## சினிமா துளிகள்..!

# முதலமைச்சர் விஜய் தொடங்கி வைத்த கார் பந்தயம் - 3 ஆம் இடம் பிடித்து அஜித்தின் அணி அசத்தல்!



முதலமைச்சர் விஜய் தொடங்கி வைத்த லே மான்ஸ் கார் பந்தய போட்டியில் நடிகர் அஜித்தின் அணி 3ஆம் இடம் பிடித்துள்ளது. அரசுமுறைப் பயணமாக இங்கிலாந்து சென்றுள்ள முதலமைச்சர் விஜய், தமிழ்நாட்டிற்குப் புதிய முதலீடுகளை ஈர்ப்பதோடு சர்வதேச விளையாட்டு உள்கட்டமைப்புகளையும் நேற்று நேரில் பார்வையிட்டார்.

அதேநேரம் நேற்று இரவு 9 மணியளவில் லண்டனில் நடிகர் அஜித் குமாரின் அணி பங்கேற்கும் மிச்செலின் லீ மான்ஸ் தொடரை முதலமைச்சர் விஜய் கொடியசைத்து தொடங்கி வைத்தார். அங்கு முதலமைச்சர் விஜய்க்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. அஜித்தை விஜய் ஓடிச் சென்று ஆரத்தழுவி அன்பை வெளிப்படுத்தினார். விஜய் வருகைக்கு அஜித் நன்றி தெரிவித்தார். தொடர்ந்து அவர் பார்வையாளர் பகுதியில் நின்று பந்தயத்தை கண்டுகளித்தார். நடிகை திரிஷாவும் பந்தயத்தை கண்டுகளிக்க பார்வையாளர் திடலுக்கு வருகை தந்தார்.

லே மான்ஸ் போட்டியில் சர்வதேச பந்தய வீரராகக் நடிகர் அஜித் குமார், LMP3 Pro/Am பிரிவில் 'Ajith RedAnt by Virage' அணியின் சார்பாக 16-ஆம் எண் கொண்ட 'Li-gier' பந்தயக் காரை இயக்கினார்.

இப்போட்டியில் அஜித் குமாருடன் பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த முன்னணி பந்தய வீரர் ரோமைன் வோஸ்னியாக் இணை காரோட்டியாக பங்கேற்றார். சுமார் 2 மணி நேரம் கார் பந்தயம் நடைபெற்றது. இதில் அஜித்குமாரின் அணி 3வது இடம் பிடித்து வரலாற்று சாதனை படைத்துள்ளது.




## முகப்பரு, சரும வறட்சி? தினமும் உணவில் சேர்க்க வேண்டிய உணவுகள்!



முகப்பரு, சரும வறட்சி, எரிச்சல் போன்ற பிரச்சினைகளுக்கு கிரீம், சீரம் மட்டும் தீர்வாகாது. உணவுப் பழக்கம், போதுமான தண்ணீர் மற்றும் அன்றாட வாழ்க்கை முறையும் சரும ஆரோக்கியத்தில் முக்கியப் பங்கு வகிக்கின்றன.

Cleveland Clinic **பரிந்துரைகளின்படி**

**சருமத்திற்கு உதவும் உணவுகள்:**

1. தக்காளி: ஆன்டிஆக்ஸிடன்ட்கள் நிறைந்தது.
2. ஆரஞ்சு, கிவி, ஸ்ட்ராபெர்ரி: வைட்டமின் C நிறைந்த இவை, சருமத்தின் கட்டமைப்புக்கு முக்கியமான கொலாஜன் உற்பத்திக்கு உதவுகின்றன.
3. குடைமிளகாய், ப்ரோக்கோலி: வைட்டமின் C உள்ளிட்ட ஊட்டச்சத்துகளை வழங்குகின்றன.
4. பாதாம், சூரியகாந்தி விதைகள்: வைட்டமின் E நிறைந்தவை; செல்களை ஆக்ஸிடேட்டிவ் பாதிப்பிலிருந்து பாதுகாக்க உதவுகின்றன.
5. அக்ரூட் பருப்பு, சியா மற்றும் ஆளி விதைகள்: ஒமேகா–3 கொழுப்பு அமிலங்கள் இருப்பதால் சருமத்தின் ஈரப்பதத்தைப் பராமரிக்கவும், அழற்சியைக் கட்டுப்படுத்தவும் உதவக்கூடும். மீன்களிலும் ஒமேகா–3 மற்றும் புரதம் கிடைக்கிறது.
6. பீன்ஸ், முழு தானியங்கள்: புரதம், நார்ச்சத்து உள்ளிட்ட பல ஊட்டச்சத்துகளை வழங்குகின்றன.

**இவற்றைக் குறைத்துக் கொள்ளுங்கள்!**

அதிக சர்க்கரை, சுத்திகரிக்கப்பட்ட மற்றும் அதிக கிளைசெமிக் குறியீடு கொண்ட உணவுகள் அழற்சி, முகப்பரு, சரும எரிச்சலை அதிகரிக்கலாம். எனவே இனிப்புகள், ஃபாஸ்ட் ஃபுட், அதிக கொழுப்புள்ள ஆரோக்கியமற்ற உணவுகள் மற்றும் அதிகப்படியான மது ஆகியவற்றைக் கட்டுப்படுத்துவது நல்லது.

போதுமான தண்ணீர் குடிப்பது, வெளியே செல்லும்போது சன்ஸ்கிரீன் பயன்படுத்துவது, அதிக நேரம் நேரடி சூரிய ஒளியைத் தவிர்ப்பது, புகைப்பிடிக்காமல் இருப்பதும் முக்கியம். சருமப் பிரச்சினைகள் தொடர்ந்து நீடித்தால் தோல் மருத்துவரை அணுகி காரணத்தைக் கண்டறிந்து சிகிச்சை பெறுவது அவசியம்.

### நாமக்கல்லில் நடைபெற்ற லோக் அதாலத்தில்

## 1,079 வழக்குகளுக்கு ரூ. 17 கோடியே, 48 லட்சத்து, 57 ஆயிரத்து 3 மதிப்பில் தீர்வு!



நாமக்கல், செப். 13–

தமிழ்நாடு மாநில சட்டப் பணிகள் ஆணைக்குழுவின் உத்தரவின்படி, நாமக்கல் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்திலும், மாவட்டத்தில் உள்ள மற்ற நீதிமன்றங்களிலும், தேசிய அளவிலான லோக் அதாலத் நடைபெற்றது.

மாவட்ட சட்டப் பணிகள் ஆணைக்குழுவின் தலைவர் மற்றும் முதன்மை நீதிபதி குருமூர்த்தி முன்னிலை வகித்தார். நாமக்கல் ஒருங்கிணைந்த நீதிமன்றத்தில் நடைபெற்ற முதலாவது அமர்வில் நீதிபதிகள் பிரபா சந்திரன், சச்சிதானந்தம், செகனாஸ்பானு ஆகியோர் கலந்துகொண்டனர்.

2வது அமர்வில், நீதிபதிகள் எழில் வேலவன், சண்முகபிரியா மற்றும் தங்கமணி ஆகியோரும் கலந்துகொண்டனர்.

திருச்செங்கோடு நீதிமன்றத்தில் முதலாவது அமர்வில் நீதிபதிகள் ரூபனா மற்றும் முத்து ஆகியோரும், 2வது அமர்வில் நீதிபதிகள் ரங்கராஜ் மற்றும் ஷண்மதி ஆகியோரும் கலந்துகொண்டனர்.

ராசிபுரம் நீதிமன்றத்தில் நீதிபதிகள் திலீப் மற்றும் மோகனபிரியா ஆகியோர் கலந்துகொண்டனர்.

பரமத்தி நீதிமன்றத்தில் முதலாவது அமர்வில் நீதிபதி நளினகுமார் மற்றும் பட்டியல் வக்கீல் செல்வமணி ஆகியோரும், 2வது அமர்வில் நீதிபதிகள் சுஹேஷ் மற்றும் கலைசெல்வி ஆகியோரும், குமாரபாளையம் நீதிமன்றத்தில் நீதிபதிகள் நவீனா மற்றும் பத்மபிரியா ஆகியோரும், சேந்தமங்கலம் நீதிமன்றத்தில் நீதிபதிகள் ரிதுலா மற்றும் ராஜாகுமரன் ஆகியோரும் அடங்கிய அமர்வுகள் வழக்குகளை விசாரணை மேற்கொண்டனர்.

நாமக்கல் ஒருங்கிணைந்த நீதிமன்றத்தில் முதன்மை மாவட்ட நீதிபதி குருமூர்த்தி மற்றும் சார்பு நீதிபதி வேலுமயில் ஆகியோர் மேற்பார்வையிட்டனர்.

லோக் அதாலத்தில், விபத்துகள் தொடர்பான வழக்குகள், செக் வழக்குகள், குடும்ப நல வழக்குகள், ஜீவனாம்சம் வழக்குகள், தொழிலாளர் நலன் தொடர்பான வழக்குகள், மின் பயன்பாடு, வீட்டு வரி மற்றும் இதர பொதுபயன்பாட்டு வழக்குகள் விசாரணைக்கு எடுத்துகொள்ளப்பட்டது. 1,711 வழக்குகள் விசாரணைக்கு எடுத்துகொள்ளபட்டு 1,079 வழக்குகளுக்கு ரூ.17,48,57,003 மதிப்பில் தீர்வு காணபட்டது.

# அரசு ஊழியர்களுக்கு நவராத்திரியில் ‘டிஏ ஹைக்’




சென்னை, செப். 13–

அடுத்த அகவிலைப்படி உயர்வுக்காக ஒரு கோடிக்கும் அதிகமான மத்திய அரசு ஊழியர்களும் ஓய்வூதியதாரர்களும் காத்திருக்கிறார்கள். நாடு முழுவதும் உள்ள சுமார் 50 லட்சம் ஊழியர்கள் மற்றும் 65 லட்சத்திற்கும் அதிகமான ஓய்வூதியதாரர்களின் கவனம் ஜூலை 2026 முதல் அமலுக்கு வரவுள்ள இந்த அகவிலைப்படி உயர்வு மீதுள்ளது.

**அகவிலைப்படி அதிகரிப்பு: நவராத்திரியில் அறிவிப்பா?**

இந்த ஆண்டு நவராத்திரி அக்டோபர் 11–ஆம் தேதி தொடங்கி, தசரா பண்டிகை அக்டோபர் 20–ஆம் தேதி கொண்டாடப்படும். ஆகையால், இந்த நவராத்திரி காலத்திலோ அல்லது விஜய தசமி தினத்தன்றோ மத்திய அரசு, ஊழியர்கள் (Central Government Em–ployees) மற்றும் ஓய்வ்தியதாரர்களுக்கு இந்த பரிசை அறிவிக்க வாய்ப்புள்ளதாக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அகில இந்திய நுகர்வோர் விலைக் குறியீட்டு (AICPI) மதிப்பீடுகள் மற்றும் அரசின் கடந்தகால நடைமுறைகளின் அடிப்படையில், அரசு ஊழியர்களுக்கு அகவிலைப்படி குறித்த நல்ல செய்தி எப்போது கிடைக்கக்கூடும் என்பதையும், இம்முறை எதிர்பார்க்கப்படும் உயர்வு எவ்வளவு என்பதையும் இங்கே விரிவாக காணலாம்.

**டிஏ உயர்வு எப்போது அறிவிக்கப்படும்?**

ஜனவரி மற்றும் ஜூலை என ஆண்டுக்கு 2 முறை மத்திய அரசு ஊழியர்களுக்கான அகவிலைப்படி மற்றும் ஓய்வூதியதாரர்களுக்கான அகவிலை நிவாரணத்தில் திருத்தம் செய்யப்படுகின்றது.

பொதுவாக, ஜூலை முதல் அமலுக்கு வரும் அகவிலைப்படியை அரசு செப்டம்பர் அல்லது அக்டோபர் மாதங்களில் அறிவிக்கும்.

நவராத்திரி காலத்தில் அறிவிப்பு வெளியாகாவிட்டால், தீபாவளிக்கு முன்னதாகவே அரசு ஊழியர்களுக்கு இந்த பரிசு கிடைக்கும்.

**டிஏ அரியர் கிடைக்கும்**

அகவிலைப்படி உயர்வுக்கான அறிவிப்பு எப்போது வெளியானாலும், அதன் விகிதங்கள் ஜூலை 1, 2026 முதல் நடைமுறைக்கு வருவதாகக் கருதப்படும். அதாவது, ஊழியர்களுக்கு முந்தைய மாதங்களுக்கான நிலுவைத் தொகையும் (DA Arrears) கிடைக்கும்.

**அகவிலைப்படி எவ்வளவு அதிகரிக்கும்?**

தற்போது, ஊழியர்கள் தங்கள் அடிப்படை ஊதியத்தில் 60%–க்கு இணையான அகவிலைப்படியைப் பெறுகின்றனர். ஜூலை மாதத்திற்கான அகில இந்திய நுகர்வோர் விலைக் குறியீட்டு (AICPI–IW) தரவுகளின்படி, குறியீட்டு எண் 153.2–ஐ எட்டியுள்ளது.

இதன் அடிப்படையில், கணக்கிடப்பட்ட அகவிலைப்படி 64%–ஆக உள்ளது. எனவே, அகவிலைப்படியில் நேரடியாக 4% உயர்வுக்கான வலுவான வாய்ப்பு உள்ளது. 8–வது ஊதியக் குழுவின் பரிந்துரைகள் முழுமையாக அமல்படுத்தப்படும் வரை, இந்த உயர்வு 7–வது ஊதியக் குழுவின் கட்டமைப்பின் கீழ் வழங்கப்படும்.

**சம்பள உயர்வு எவ்வளவு இருக்கும்?**

கையில் கிடைக்கும் சம்பளம் (in–hand salary) எவ்வளவு அதிகரிக்கும்? அகவிலைப்படியில் 4% உயர்வு என்பது உங்கள் மொத்த ‘கையில் கிடைக்கும் சம்பளம்’ 4% அதிகரிக்கும் என்று அர்த்தமல்ல என்பதைப் புரிந்துகொள்வது அவசியம். அகவிலைப்படி ஊழியர்களின் அடிப்படை ஊதியத்தின் அடிப்படையில் கணக்கிடப்படுகிறது. அகவிலைப்படி 4% அதிகரிக்கப்பட்டால், டிஏ உயர்வுக்குப் பிறகு பல்வேறு நிலைகளில் உள்ள ஊழியர்களின் அடிப்படை ஊதியம் எவ்வாறு அதிகரிக்கும் என்பதை இங்கே காணலாம்.

**லெவல் வாரியான சம்பள உயர்வு:**

| பே லெவல் | அடிப்படை ஊதியம் | 4% டிஏ உயர்வு | மதிப்பிடப்பட்ட புதிய ஊதியம் |
|---|---|---|---|
| லெவல் 1 | ரூ.18,000 | ரூ.720 | ரூ.18,720 |
| வெலல் 5 | ரூ.29,200 | ரூ.1,168 | ரூ.30,368 |
| லெவல் 6 | ரூ.35,400 | ரூ.1,416 | ரூ.36,816 |
| லெவல் 7 | ரூ.44,900 | ரூ.1,796 | ரூ.46,696 |
| லெவல் 8 | ரூ.47,600 | ரூ.1,904 | ரூ.49,504 |
| லெவல் 10 | ரூ.56,100 | ரூ.2,244 | ரூ.58,344 |

**ஓய்வூதியதாரர்களுக்கு அகவிலை நிவாரணம் உயர்வு**

அவிலைப்படியின் (DA) உயர்வு கையில் கிடைக்கும் ஊதியத்தை மட்டும் அதிகரிப்பதல்ல. அது வருங்கால வைப்பு நிதி (PF), பணிக்கொடை (gra–tuity) மற்றும் ஓய்வூதியதாரர்களின் மாதாந்திர ஓய்வூதியம் ஆகியவற்றிலும் தாக்கத்தை ஏற்படுத்துகிறது.

அமைச்சரவைக் கூட்டத்தில் அரசு இதற்கு ஒப்புதல் அளித்தவுடன், பண்டிகைக் காலத்தில் ஊழியர்களின் வங்கிக் கணக்குகளில் உயர்த்தப்பட்ட ஊதியம் மற்றும் நிலுவைத் தொகை ஆகியவை வரவு வைக்கப்படும் என நம்பப்படுகின்றது.

**பொறுப்புத் துறப்பு:** இந்த பதிவு தகவல் நோக்கங்களுக்காக மட்டுமே எழுதப்பட்டுள்ளது. சமீபத்திய மற்றும் துல்லியமான தகவல்களுக்கு அதிகாரப்பூர்வ அரசாங்க தளங்களை அணுக பரிந்துரைக்கப்படுகின்றது.

# பென்ஷன் தாமதம்... கவலை வேண்டாம்!




சென்னை, செப். 13–

தமிழக அரசின் சமூகப் பாதுகாப்புத் திட்டங்களின் கீழ் முதியோர், மாற்றுத்திறனாளிகள், விதவையர் உள்ளிட்டோருக்கு வழங்கப்படும் மாதாந்திர ஓய்வூதியத் தொகை வரவு வைப்பதில் ஏற்பட்டுள்ள தாமதம் குறித்து பயனாளிகள் அச்சப்படத் தேவையில்லை என தமிழக அரசு தெரிவித்துள்ளது.

தமிழகத்தில் 12 வகையான சமூகப் பாதுகாப்புத் திட்டங்களின் கீழ் 35.37 லட்சம் பேர் பயனடைந்து வருகின்றனர். இவர்களில் சுமார் 15.56 லட்சம் பேருக்கு ஆகஸ்ட் மாதத்திற்கான, செப்டம்பரில் வழங்கப்படும் ஓய்வூதியத் தொகை ஏற்கெனவே வங்கிக் கணக்குகளில் செலுத்தப்பட்டுள்ளது.

மத்திய அரசின் நிதிப் பங்களிப்புடன் செயல்படுத்தப்படும் இந்திரா காந்தி தேசிய முதியோர், விதவை மற்றும் மாற்றுத்திறனாளிகள் ஓய்வூதியத் திட்டங்களின் கீழ் 19.20 லட்சம் பேர் பயன்பெறுகின்றனர். இவர்களுக்கு நடப்பு மாதம் முதல் ‘எஸ்என்ஏ–ஸ்பார்ஷ்’ (SNA–SPARSH) என்ற புதிய நிதிப் பரிவர்த்தனை தளம் மூலம் பணம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மத்திய அரசு அலுவலகங்களுக்கு செப்டம்பர் 11 முதல் 14 வரை தொடர் விடுமுறை என்பதால், மத்திய அரசின் பங்களிப்புத் தொகைக்கான ஒப்புதல் பெறுவதில் சிறிய நிர்வாகத் தாமதம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, செப்டம்பர் 14–ஆம் தேதிக்குப் பிறகு விடுபட்ட அனைத்து பயனாளிகளுக்கும் ஓய்வூதியத் தொகை அவர்களது வங்கிக் கணக்குகளில் முறையாக செலுத்தப்படும். பயனாளிகள் கலக்கமடைய வேண்டாம் என தமிழக அரசு தெரிவித்துள்ளது.

# குடி’மகன்களுக்கு குட் நியூஸ்: விரைவில் 25 புது ரகம் அறிமுகம்!




சென்னை, செப். 13–

‘டாஸ்மாக்’ கடைகளில், 25 புதிய மது வகைகள் விற்பனைக்கு வர உள்ளன. அவற்றுக்கு விலை நிர்ணயம் செய்ய, மதுபான நிறுவனங்களுடன் அதிகாரிகள் நடத்திய பேச்சு இறுதி கட்டத்தை எட்டியுள்ளது. தமிழக அரசின் டாஸ்மாக் நிறுவனம், 11 மதுபான ஆலைகளிடம் இருந்து மது வகைகள், ஏழு ஆலைகளிடம் இருந்து பீர் வகைகள், ஒரு ஆலை யிடம் இருந்து ஒயின் கொள்முதல் செய்கிறது.

தமிழகத்தில் தயாரிக்கப்படும், 174 மது வகைகள், 40 பீர் வகைகள், நான்கு ஒயின்கள் மற்றும் பிற மாநில மதுபானங்களில் ஆறு மது வகைகள், ஐந்து பீர், ஐந்து ஒயின்கள் விற்கப்படுகின்றன. மேலும், 538 மது வகைகளை டாஸ்மாக் இறக் குமதி செய்து, வணிக வளாகங்களில் உள்ள மது கடைகளில் விற்கிறது.

கடந்த தி.மு.க., ஆட்சி யில், அக்கட்சிக்கு வேண்டியவர்கள் நடத்தும் சில ஆலைகளில் இருந்து தான் அதிகளவில் மது வகைகள் வாங்கப்பட்டன. இதனால், மது பிரியர்கள் விரும்பும் மது வகைகள் கிடைக்கவில்லை. தற்போது, ஆட்சி மாற் றம் ஏற்பட்டுள்ள நிலை யில், புதிய, ‘பிராண்டு’ மது வகைகளை அதிகளவில் விற்க, டாஸ்மாக் முடிவு செய்துள்ளது. இதற்காக, மதுபான தயாரிப்பு ஆலைகளிடம் அதிகாரிகள் பேச்சு நடத்தி வருகின்றனர். அதில், 25 மது வகைகள் தேர்வாகியுள்ளன. இதுகுறித்து, டாஸ்மாக் அதிகாரி ஒருவர் கூறியதாவது:

புதிய பிராண்டு மதுபானம், பீர் விற்பது தொடர்பாக, 20க்கும் மேற்பட்ட நிறுவனங்களுடன் பேச்சு நடத்தப்பட்டுள்ளது. அதன் அடிப்படை யில், 25 புதிய பிராண்டுகள் தேர்வு செய்யப்பட்டு, விலை நிர்ணயம் ‘செய்யும் பணி நடந்து வருகிறது. இதற்கு, டாஸ்மாக் இயக்குநர்கள் குழு கூட்டத்தில் ஒப்புதல் பெறப்பட்டு, விரைவில் மது கடைகளில் விற்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு அவர்கூறினார்.

# தமிழ்நாடு அரசு ஊழியர்களுக்குக் கெடு!



சென்னை, செப்.13–

தமிழ்நாடு அரசு ஊழியர்கள் மற்றும் அதிகாரிகள் அனைவரும் தங்களின் சொத்து மற்றும் கடன் விவரங்களை வரும் அக்டோபர் 31–ஆம் தேதிக்குள் கட்டாயம் தாக்கல் செய்ய வேண்டும் என்று தமிழ்நாடு அரசு அதிரடி உத்தரவு பிறப்பித்துள்ளது.

கடந்த ஜனவரி மாதம் மேற்கொள்ளப்பட்ட சட்டத் திருத்தத்தின் தொடர்ச்சியாக, இந்த விவரங்களை தாக்கல் செய்வதற்கான காலக்கெடு மற்றும் நடைமுறைகள் தற்போது முறைப் படி அறிவிக்கப்பட்டுள்ளன.

2025–ஆம் ஆண்டு டிசம்பர் 31–ஆம் தேதி நிலவரப்படி அரசு ஊழியர்களிடம் உள்ள சொத்து மற்றும் கடன் விவரங்கள் கணக்கில் எடுத்துக்கொள்ளப் படும். சொத்து விவரங்களை அலுவலகத்தில் நேரடியாகவோ அல்லது காகித வடிவிலோ வழங்க வேண்டிய அவசியமில்லை. தமிழ்நாடு அரசின் ஒருங்கிணைந்த நிதி மற்றும் மனிதவள மேலாண்மை அமைப்பு (IFHRMS) இணையதளம் வழியாகவே முழுமையாகப் பதிவேற்றம் செய்ய வேண்டும்.

சொந்தப் பெயரில் அல்லது குடும்பத்தினர் பெயரில் உள்ள வீடு, மனை, விவசாய நிலம் உள்ளிட்ட விவரங்கள். நகைகள், வாகனங்கள், வங்கியில் உள்ள வைப்புத் தொகை மற்றும் பிற முதலீடுகள்.

அரசு ஊழியர்கள் பெற்றுள்ள அனைத்து விதமான கடன் தொடர்பான தகவல்களையும் தவறாமல் குறிப்பிட வேண் டும் அரசு நிர்வாகத்தில் வெளிப்படைத்தன்மையை உறுதி செய்யும் வகையில் இந்த நடவடிக்கை தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

# வேலை வாய்ப்பு

## தமிழக சுகாதாரத்துறையில் 4,724 STAFF NURSE பணியிடங்கள்!

தமிழ்நாடு அரசு

**மாநில நலவாழ்வு சங்கம், தமிழ்நாடு**

**மருத்துவம் - மக்கள் நல்வாழ்வுத் துறை**

**அறிவிப்பு**

மாவட்ட நலவாழ்வு சங்கம், தேசிய நலவாழ்வு குழுமம் - தமிழ்நாடு (NHM - TN) இல் - இயக்குநர் - பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத் துறை, இயக்குநர் - மருத்துவம் மற்றும் ஊரக சுகாதாரப் பணிகள், இயக்குநர் - மருத்துவக் கல்வி & ஆராய்ச்சி மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி ஆகியோரின் கீழ் உள்ள மருத்துவமனைகளில் காலியாக உள்ள பணியிடங்களுக்கு ஒப்பந்த அடிப்படையில் முற்றிலும் தற்காலிகமாக பணிபுரிவதற்கு தற்காலிக செவிலியர் **(Staff Nurse)** பதவிக்கு பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் மாவட்ட நலவாழ்வு அலுவலகத்தில் **25.09.2026** அன்று **மாலை 5.00** மணிக்குள் வரவேற்கப்படுகின்றன.

| வ. எண் | பதவியின் பெயர் | மாவட்டத்தில் உள்ள மொத்த காலியிடங்கள் | வயது | தகுதி |
|---|---|---|---|---|
| 1 | ஒப்பந்த / தற்காலிக செவிலியர் (Staff Nurse) | 4724 | 50 வயது வரை | செவிலியர் பட்டய படிப்பு (GNM) அல்லது இளங்கலை செவிலியர் பட்டம் (B.Sc Nursing) - அரசு அல்லது அரசு அங்கீகாரம் பெற்ற தனியார் செவிலியர் கல்லூரி - இந்திய செவிலியர் குழுமத்தால் அங்கீகரிக்கப்பட்டது. தமிழ்நாடு நர்சிங் கவுன்சில் பதிவு கட்டாயம் |

**விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி :**
**சம்பந்தப்பட்ட மாவட்ட சுகாதார அலுவலர் / செயற் செயலாளர் (செங்கல்பட்டு மற்றும் திருப்பூர் மாவட்டம் தவிர), மாவட்ட சுகாதார அலுவலகம் / சம்பந்தப்பட்ட மாவட்ட நலவாழ்வு சங்கம்.**

**குறிப்பு :**
1. தற்போது தேர்தல் நடத்தை விதிமுறைகள் நடைமுறையில் உள்ள திருப்பூர் மற்றும் செங்கல்பட்டு மாவட்டங்களுக்கு இவ்வறிவிப்பு பொருந்தாது.
2. விண்ணப்ப படிவங்கள் / மாவட்ட வாரியாக காலியிடங்கள் விபரம் தேசிய நலவாழ்வு குழுமம் **(https://nhm.tn.gov.in)** வலைதளம் மூலம் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.
3. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் மற்றும் தகுந்த ஆவண நகல்களுடன் மேலே குறிப்பிட்ட மாவட்ட நலவாழ்வு சங்க அலுவலகத்திற்கு **25.09.2026** அன்று **மாலை 5.00** மணிக்குள் சமர்ப்பிக்க வேண்டும்.

குழும இயக்குநர்,
தேசிய நலவாழ்வுக் குழுமம் - தமிழ்நாடு

செ.ம.தொ.இ./802/வரைகலை/2026

## குடமுழுக்கு: செப்.17 மதுரை மாவட்டத்துக்கு உள்ளூர் விடுமுறை!



மதுரை, செப். 13–

மதுரை மாவட்டத்துக்கு செப். 17–ஆம் தேதி உள்ளூர் விடுமுறை அளிக்க மாவட்ட ஆட்சியருக்கு அதிகாரம் வழங்கப்படுவதாக சனிக்கிழமை அரசாணை வெளியானது.

இதைத் தொடர்ந்து, மாவட்ட ஆட்சியர் நிஷாந்த் கிருஷ்ணா வெளியிட்ட செய்திக் குறிப்பு: மீனாட்சி சுந்தரேசுவரர் கோயில் குடமுழுக்கையொட்டி, மதுரை மாவட்ட எல்லைக்குள்பட்ட அனைத்து மாநில அரசு அலுவலகங்கள், கல்வி நிறுவனங்களுக்கு செப். 17–ஆம் தேதி உள்ளூர் விடுமுறை அளிக்கப்படுகிறது.

இருப்பினும், மாவட்டக் கருவூலங்கள், சார்நிலைக் கருவூலங்கள் மட்டும் அரசின் அவசரப் பணிகளைக் கவனிக்கும் வகையில் குறைந்தபட்ச எண்ணிக்கையிலான பணியாளர்களைக் கொண்டு அன்றைய தினம் இயங்கும். இந்த விடுமுறை செப். 26–ஆம் தேதியை (சனிக்கிழமை) பணி நாளாகக் கொண்டு ஈடு செய்யப்படும் என்றார் அவர்.

### சட்டசபையில் முன்னாள் முதல்வர் குறித்து தவறாக பேசிய

## தமிழக முதல்வரைக் கண்டித்து நாமக்கல்லில் திமுக சார்பில் ஆர்ப்பாட்டம்!




நாமக்கல், செப். 13–

தமிழக சட்டசபையில், முன்னாள் முதல்வரும், திமுக தலைவருமான ஸ்டாலின் குறித்து தவறாக பேசிய, தமிழக முதல்வர் விஜய்யை கண்டித்து, நாமக்கல் கிழக்கு மற்றும் மேற்கு மாவட்ட திமுக சார்பில், நாமக்கல் பார்க் ரோட்டில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

கிழக்கு மாவட்ட திமுக செயலாளர் ராஜேஷ்குமார், எம்.பி., மேற்கு மாவட்ட செயலாளர் மூர்த்தி ஆகியோர் முன்னிலை வகித்தனர். முன்னாள் அமைச்சர் டாக்டர் மதிவேந்தன் ஆர்ப்பாட்டத்தை துவக்கி வைத்துப் பேசினார்.


முன்னாள் முதல்வரும் திமுக தலைவருமான ஸ்டாலின் குறித்தும், மிசாவில் அவர் கைது செய்யப்பட்டது குறித்தும், தமிழக சட்டசபையில் தவறான கருத்தை தெரிவித்த முதல்வர் விஜய்யை கண்டித்து கோஷங்கள் எழுப்பப்பட்டன.

இந்த ஆர்ப்பாட்டத்தில் மாநில திமுக நிர்வாகிகள் மாயவன், ராணி, நக்கீரன், மாநகராட்சி மேயர் கலாநிதி, துணை மேயர் பூபதி, நகர திமுக செயலாளர்கள் ராணா ஆனந்த், சிவகுமார், முன்னாள் எம்எல்ஏக்கள் ராமசுவாமி, ராமலிங்கம், முன்னாள் மாவட்ட செயலாளர் மதுரா செந்தில் உட்பட திரளான திமுகவினர் கலந்துகொண்டனர்.


இஸ்மாயில் லக்கி டிராவல்ஸ்
127, T.P.K.ரோடு, மதுரை.
Ph: 98659 88882
மதுரை to சென்னை ரெகுலர் சர்வீஸ் பஸ் மற்றும் பார்சல் சர்வீஸ் உள்ளது
சென்னை
Ph: 98659 88881



## இன்றைய கார்ட்டூன்




# அயர்லாந்துக்கு டிரம்ப் திடீர் பயணம்!

டப்ளின், செப். 13–

அமெரிக்காவில் நவம்பர் மாதம் நாடாளுமன்ற இடைத்தேர்தல் வரவிருக்கிறது. மற்றொரு பக்கம் ஈரான் நாட்டுடன் கடுமையான போர் பதற்றம் நிலவி வருகிறது. இந்த பரபரப்பான சூழ்நிலையிலும் அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் அயர்லாந்து நாட்டுக்கு திடீர் பயணம் மேற்கொண்டுள்ளார்.



அங்குள்ள டூன்பெக் நகரில் தனது நிறுவனத்திற்குச் சொந்தமான மைதானத்தில் நடக்கும் 'ஐரிஷ் ஓபன்' கோல்ப் போட்டியை ரசிப்பதற்காக அவர் அங்கு சென்றுள்ளார்.

இறுதிப்போட்டியில் அவரே நேரில் நின்று கோப்பையையும் வழங்குகிறார். இது அரசுமுறைப் பயணம் இல்லை என்றாலும், அயர்லாந்து அதிபர் கேத்தரின் கானோலி மற்றும் பிரதமர் மைக்கேல் மார்ட்டின் ஆகியோரை சந்தித்து அவர் ஆலோசனை நடத்த உள்ளார். அயர்லாந்தில் டிரம்பின் வருகைக்கு எதிர்ப்பு தெரிவித்து மக்கள் வீதிகளில் இறங்கி தீவிரப் போராட்டத்தில் ஈடுபட்டு வருவதால் அங்கு பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

# சுபமுகூர்த்த நாள், விநாயகர் சதுர்த்தி: பூக்கள் விலை கிடுகிடு உயர்வு!

சேலம், செப். 13–

சுபமுகூர்த்த நாள் மற்றும் விநாயகர் சதுர்த்தியையொட்டி சேலத்தில் நேற்று பூக்கள் விலை கிடுகிடுவென உயர்ந்தது. குண்டுமல்லி கிலோ ரூ1, 600–க்கு விற்பனை செய்யப்பட்டது.



சேலம் கடைவீதி பகுதியில் வ.உ.சி. பூ மார்க்கெட் உள்ளது. இந்த மார்க் கெட்டுக்கு ஓமலூர், காடையாம்பட்டி, வீராணம், வாழப்பாடி உள்ளிட்ட பகுதிகளில் இருந்து குண்டுமல்லி, சன்னமல்லி, சாமந்தி, அரளி உள் ளிட்ட பூக்கள் விற்பனைக்காக கொண்டு வரப்படுகிறது. இன்று (ஞாயிற் றுக்கிழமை) சுபமுகூர்த்த நாள் மற்றும் நாளை (திங்கட்கிழமை) விநாய கர் சதுர்த்தி விழா கொண்டாடப்படுகிறது.

இதையொட்டி நேற்று குண்டுமல்லி, சன்னமல்லி உள்ளிட்ட பூக்கள் விலை கடுமையாக உயர்ந்தது. அதாவது கடந்த வாரம் கிலோ ரூ.600 வரை விற்ற குண்டுமல்லி நேற்று ரூ.1,600–க்கு விற்பனையானது. கடந்த வாரம் ரூ.400 வரை விற்பனையான சன்னமல்லி நேற்று ரூ.1,300–க்கும், கடந்த வாரம் ரூ.280 வரை விற்கப்பட்ட ஜாதிமல்லி நேற்று ரூ.600–க்கும் விற்பனை செய்யப்பட்டன.

இதேபோல் காக்கட்டான், கலர் காக்கட்டான், மலை காக்கட்டான் ஆகியவை கிலோ ரூ.400–க்கும், அரளி 240–க்கும், வெள்ளை அரளி, மஞ்சள் அரளி, ஐ. செவ்வரளி ஆகியவை தலா ரூ.300–க்கும், நந்தியா வட்டம் ரூ.450–க்கும், சிந்தியா வட்டம் ரூ.800–க்கும், சாமந்தி ரூ.500–க்கும், சாதா சம்பங்கி ரூ.600–க்கும் விற்கப்பட்டன.

வ.உ.சி. பூ மார்க்கெட்டில் நேற்று மக்கள் கூட்டம் வழக்கத்தை விட அதி கமாக இருந்தது. விலை உயர்வால் அவர்கள் பூக்களை குறைவாக வாங்கி சென்றதை பார்க்க முடிந்தது. விநாயகர் சதுர்த்தி விழா மற்றும் சுப முகூர்த்த நாட்கள் வர உள்ளதால் இந்த விலை உயர்வு இன்னும் சில நாட்களுக்கு நீடிக்கும் என்று வியாபாரிகள் தெரிவித்தனர்.



தேனி மாவட்டம் கம்பம் சி.பி.யு. மேல்நிலைப்பள்ளியில் மாவட்ட நிர்வாகம், மாவட்ட வேலைவாய்ப்பு தொழில் நெறிவழிகாட்டு மையம், தமிழ்நாடு மாநிலஊரக, நகர்புற வாழ்வாதார இயக்கம் இணைந்து நடத்திய மாபெரும் தனியார்துறை வேலைவாய்ப்பு முகாமில் தெரிவுசெய்யப்பட்ட 613 நபர்களுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் வைத்திநாதன் பணி ஆணைகளை வழங்கினார். உடன் கம்பம் எம்.எல்.ஏ.ஜெகநாத் மிஸ்ரா உள்பட பலர் உள்ளனர்.

# கீழக்கரை நுகர்வோர் நலச்சங்க கூட்டம்!

ராமநாதபுரம், செப். 13–

ராமநாதபுரம் மாவட்டம் கீழக்கரை நுகர்வோர் நலச்சங்க பொதுக்குழு கூட்டம் தலைவர் செய்யது இப்ராஹிம் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் 20252026 ஆண்டிற்கான தணிக்கை அறிக்கை ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.




கீழக்கரையில் நவீன நூலகம், போக்குவரத்து காவல் நிலையம் அமைத்தல், நஞ்சில்லாத உணவு கிடைக்க நடவடிக்கை, புதிய பேருந்து நிலையத்திற்கு அனைத்து புறநகர் பேருந்துகளும் வந்து செல்லுதல் உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. மேலும், அரசு துறைகளில் பொதுமக்கள் அளிக்கும் மனுக்களுக்கு ரசீது வழங்கி, குறிப்பிட்ட காலத்திற்குள் தீர்வு காண வேண்டும் என வலியுறுத்தப்பட்டது.

செயலாளர் பாக்கர் அலி ஆண்டு அறிக்கையையும், பொருளாளர் விஜயராமு தணிக்கை அறிக்கையையும் சமர்ப்பித்தனர். ஜாகிர் உசேன், சீனி இப்ராஹிம், முகமது யூசுப், முத்துசாமி, மலராஜ் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# இது காரா... நடமாடும் கோட்டையா? பிரிக்ஸ் மாநாட்டில் கவனம் ஈர்த்த புதின்-ஜின்பிங் கார்கள்!

புதுடெல்லி, செப். 13–

பிரிக்ஸ் உச்சி மாநாட்டுக்காக டெல்லி வந்துள்ள ரஷ்ய அதிபர் விளாதிமிர் புதின், சீன அதிபர் ஷி ஜின்பிங் ஆகியோரின் அதிநவீன பாதுகாப்பு கார்கள் பெரும் கவனம் ஈர்த்துள்ளன.




புதின் பயன்படுத்தும் 'ஆரஸ் செனட்' கார், துப்பாக்கிச் சூடு மற்றும் வெடிகுண்டு தாக்குதல்களை எதிர்கொள்ளும் வகையில் கவசப் பாதுகாப்புடன் வடிவமைக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. குண்டு துளைக்காத கண்ணாடி, Run–Flat டயர்கள் மற்றும் சக்திவாய்ந்த V8 எஞ்சின் உள்ளிட்ட வசதிகள் இதில் இடம்பெற்றுள்ளன.

ஷி ஜின்பிங் பயன்படுத்தும் 'ஹோங்கி N701' காரின் முழுமையான தொழில்நுட்ப விவரங்கள் வெளியிடப்படவில்லை. இருப்பினும், கனரக கவசம், குண்டு துளைக்காத கண்ணாடி மற்றும் அவசரகால பாதுகாப்பு வசதிகள் இருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

உலகத் தலைவர்களின் இந்த வாகனங்கள் சொகுசு கார்களாக மட்டுமின்றி, நகரும் பாதுகாப்புக் கோட்டைகளாகவும் பார்க்கப்படுகின்றன.

# 'தள்ளுபடி' ஏமாற்றுக்கு மத்திய அரசு செக்! ஆன்லைன் விற்பனைக்கு புதிய கட்டுப்பாடுகள்!

புதுடெல்லி, செப். 13–

ஆன்லைன் ஷாப்பிங்கில் விலையை செயற்கையாக உயர்த்தி, பின்னர் பெரிய தள்ளுபடி வழங்குவதுபோல் காட்டப்படுவதாக எழுந்த புகார்களைத் தொடர்ந்து, ஈ–காமர்ஸ் விதிகளில் மத்திய அரசு முக்கிய மாற்றங்களை கொண்டு வந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. புதிய விதிகளின்படி, ஒரு பொருளுக்கு தள்ளுபடி அறிவிக்கும்போது அதன் தற்போதைய விலையுடன், முந்தைய 30 நாட்களில் விற்கப்பட்ட மிகக் குறைந்த விலையையும் தெளிவாகக் குறிப்பிட வேண்டும்.

மேலும், வாடிக்கையாளர்களை தவறாக வழிநடத்தும் 'Dark Patterns', Sponsored Listings, Search Result Manipulation போன்ற நடைமுறைகள் கண்காணிக்கப்படும். Sponsored பொருட்கள் என்பதைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும்.


பொருளின் காலாவதி தேதி, Return, Refund, Warranty, Delivery, Payment உள்ளிட்ட விவரங்களையும் வெளிப்படையாகக் காட்ட வேண்டும். இறக்குமதி பொருட்களுக்கு நாடு மற்றும் இறக்குமதியாளர் விவரங்களும் இடம்பெற வேண்டும்.

நுகர்வோரின் அனுமதியின்றி தனிப்பட்ட தகவல்களைப் பயன்படுத்துவதற்கும் கட்டுப்பாடு விதிக்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அக்.1 முதல் வங்கி சேவையில் புதிய மாற்றம்!

புதுடெல்லி, செப். 13–

வங்கிச் சேவைகளை டிஜிட்டல் மயமாக்கும் நடவடிக்கையின் ஒரு பகுதியாக, பழமையான 1891–ம் ஆண்டு வங்கிப் பதிவேடுகள் ஆதாரச் சட்டத்தில் மத்திய அரசு திருத்தம் கொண்டு வந்துள்ளது. புதிய நடைமுறை அக்டோபர் 1 முதல் நாடு முழுவதும் அமலுக்கு வரவு ள்ளது. புதிய சட்டத்தின்படி, வங்கிக ளில் காகித வடிவில் பராமரிக்கப்படும் கணக்குப் பதிவுகளுக்கு இணையாக மின்னணு, மெய்நிகர் மற்றும் கிளவுட் தொழில்நுட்பத்தில் பராமரிக்கப்படும் வங்கிப் பதிவுகளுக்கும் சட்ட அங்கீகாரம் வழங்கப்படுகிறது. இதனால் விசா விண்ணப்பம், நீதிமன்றம் மற்றும் பிற அலுவல் தேவைகளுக்காக வங்கிக் கணக்கு விவரங்களைச் சமர்ப்பிக்க, ஒவ்வொரு முறையும் வங்கிக் கிளைக்குச் சென்று ஸ்டேட்மெண்ட் அச்சிட்டு, அதிகாரியின் கையொப்பம் மற்றும் முத்திரை பெற வேண்டிய அவசியம் குறையும்.



இணைய வங்கி அல்லது மொபைல் செயலி மூலம் பதிவிறக்கம் செய்யப்படும் டிஜிட்டல் வங்கி ஆவணங்களை அதிகாரபூர்வ ஆதாரங்களாகப் பயன்படுத்துவதற்கும், இ–கையொப்பம் மூலம் சான்றளிப்பதற்கும் புதிய சட்டம் வழிவகுக்கிறது. இதனால் ஆவண சரிபார்ப்பு விரைவாகி, வங்கிச் சேவைகளைப் பெறுவதும் எளிதாகும்.

மேலும், வங்கிக்குத் தொடர்பில்லாத வழக்குகளில் வங்கி அதிகாரிகளை நீதிமன்றத்திற்கு அழைப்பதிலும் கட்டுப்பாடு கொண்டுவரப்பட்டுள்ளது. தவிர்க்க முடியாத சிறப்பு காரணம் இருந்தால், அதனை நீதிமன்றம் எழுத்துப்பூர்வமாகப் பதிவு செய்ய வேண்டும். காகிதமில்லா வங்கிச் சேவையை நோக்கிய இந்த மாற்றம், பொதுமக்களின் வங்கி அலைச்சலையும் நேர விரயத்தையும் குறைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# தீபாவளி ரயில் டிக்கெட்... சில நிமிடங்களில் 'ஹவுஸ்புல்'!

சென்னை, செப். 13–

தீபாவளி, பொங்கல் மற்றும் தொடர் விடுமுறை நாட்கள் வந்தாலே ரயில் டிக்கெட் முன்பதிவு தொடங்கிய சில நிமிடங்களில் முடிந்துவிடுவது பயணிகளுக்கு பெரும் ஏமாற்றமாக மாறியுள்ளது. இந்த ஆண்டு நவம்பர் 8–ஆம் தேதி தீபாவளி கொண்டாடப்படவுள்ள நிலையில், நவம்பர் 5, 6, 7 தேதிகளுக்கான ரயில் டிக்கெட்டுகள் முன்பதிவு தொடங்கிய சில நிமிடங்க ளிலேயே முடிந்துள்ளன. தீபாவளி முடிந்து சென்னை திரும்புவதற்கான நவம்பர் 9, 10 தேதிகளிலும் இதே நிலை ஏற்பட்டுள்ளது.

பயணிகள் முன்கூட்டியே IRCTC கணக்கில் பணம் வைத்துக்கொண்டு காலை 8 மணிக்கு தயாராக இருந்தாலும், 'High Load', Login ஆகாதது, பணப்பரிமாற்றம் தோல்வியடைவது போன்ற பிரச்சினைகளால் டிக்கெட் பெற முடியவில்லை என புகார் தெரிவிக்கின்றனர். ஜூலை 15–ஆம் தேதி மேம்படுத்தப்பட்ட IRCTC இணையதளம் அறிமுகப்படுத்தப்பட்ட பிறகும் பிரச்சினைகள் தொடர்வதாக பயணிகள் கூறுகின்றனர்.

ஆனால், இணையதளப் பிரச்சினை மட்டும் இதற்குக் காரணமல்ல. பயணிகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப ரயில்களும் முன்பதிவு இருக்கைகளும் இல்லாததே முக்கியப் பிரச்சினையாக உள்ளது.

**சென்னைமதுரை: டிக்கெட் எவ்வளவு?**

சென்னையிலிருந்து மதுரை வழியாக தென் மாவட்டங்களுக்கு தினசரி சுமார் 14 ரயில்கள் இயக்கப்படுகின்றன. மதுரையை மையமாகக் கொண்ட தேஜஸ், வைகை, பாண்டியன் உள்ளிட்ட ரயில்களுடன் வந்தே பாரத் சேவைகளையும் சேர்த்தால், மதுரைக்கு ஏசி உள்பட தோராயமாக 4,000 முன்பதிவு டிக்கெட்டுகளே உள்ளன. இதில் சாதாரண மக்களுக்கு அதிகம் பயன்படும் 2S மற்றும் ஸ்லீப்பர் டிக்கெட்டுகள் வெறும் 1,078 மட்டுமே. செங்கோட்டைக்கு இயக்கப்படும் பொதிகை மற்றும் கொல்லம் தினசரி ரயில்களில் சேர்த்து 579 ஸ்லீப்பர் டிக்கெட்டுகளே கிடைக்கின்றன. திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி உள்ளிட்ட தென் மாவட்டங்களுக்குச் செல்லும் தினசரி ஸ்லீப்பர் வசதி கொண்ட முக்கிய ரயில்கள் சுமார் 12 மட்டுமே.

ஒரு ரயிலுக்கு சராசரியாக 300 ஸ்லீப்பர் இருக்கைகள் என்று கணக்கிட்டால், தென் மாவட்டங்களுக்கு ஒரு நாளில் கிடைப்பது சுமார் 3,600 டிக்கெட்டுகள்தான். ஆனால் விழாக்காலங்களில் லட்சக்கணக்கானோர் சொந்த ஊர்களுக்குச் செல்ல முயற்சிக்கின்றனர்.

**கூடுதல் ரயில்கள் வேண்டும்!**

தென் மாவட்டங்களுக்கான ரயில்களின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும்; வாய்ப்புள்ள ரயில்களில் கூடுதல் பெட்டிகளை இணைக்க வேண்டும்; விழாக்கால சிறப்பு ரயில்களை கடைசி நேரத்தில் அறிவிக்காமல் முன்கூட்டியே அறிவிக்க வேண்டும் என்பது பயணிகளின் கோரிக்கையாக உள்ளது.

மேலும் விழாக்காலங்களில் பகல் நேரத்தில் 2S இருக்கை வசதி கொண்ட கூடுதல் ரயில்களை இயக்கினால் சாதாரண மற்றும் நடுத்தர மக்களுக்கு பெரும் உதவியாக இருக்கும். "டிக்கெட் விற்றுத் தீர்ந்துவிட்டது" என்பதைக் காட்டிலும், தேவைக்கு ஏற்ப போதுமான டிக்கெட்டுகளும் ரயில்களும் இருக்கின்றனவா என்பதே முக்கியமான கேள்வி. சாதாரண மக்களின் முக்கியப் போக்குவரத்தாகக் கருதப்படும் ரயில்வே, விழாக்கால நெரிசலுக்கு நிரந்தரத் தீர்வு காண வேண்டிய நேரம் இது.

## வேளாங்கண்ணி திருவிழா 2026-இல் பயன்படுத்தப்பட்ட

# PET பாட்டில் சேகரிப்பு இயக்கத்தை தொடங்கி வைத்த ஹிந்துஸ்தான் கோகோ-கோலா பெவரேஜஸ்!




நாகப்பட்டினம், செப். 13–

வேளாங்கண்ணி சிறப்பு தர நகர பஞ்சாயத்து, நாகப்பட்டினம் மாவட்ட நிர்வாகம் மற்றும் செயல்படுத்தும் பங்காளர் சங்கம் பிரதிஷ்டான் ஆகியோருடன் இணைந்து, ஆண்டுதோறும் நடைபெறும் வேளாங்கண்ணி திருவிழாவின்போது, ஹிந்துஸ்தான் கோகோ–கோலா பெவரேஜஸ் (HCCB) நிறுவனம் தனது 'கிரீன்ஸ்வீப்' முயற்சியின் கீழ் 'பயன்படுத்தப்பட்ட PET பாட்டில் இல்லா வேளாங்கண்ணி திருவிழா 2026' இயக்கமான கிரீன்ஸ்வீப்பை தொடங்கி வைத்தது.

நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியர் திரு. கே. ஜே. பிரவீன் குமார், ஐ.ஏ.எஸ்.; வேளாங்கண்ணி சிறப்பு தர நகர பஞ்சாயத்து தலைவர் திருமதி. ஏ. டயானா சர்மிளா; வேளாங்கண்ணி சிறப்பு தர நகர பஞ்சாயத்து துணைத் தலைவர் திரு. தாமஸ் அல்வா எடிசன்; சிறப்பு நிர்வாக அதிகாரி திரு. டி. கலியபெருமாள்; சுகாதார அதிகாரி திரு. சுப்ரமணியம்; நாகப்பட்டினம் மாவட்ட பொது சுகாதார துணை இயக்குநர் திரு. டாக்டர் பிரதீப் வி. கிருஷ்ணகுமார், எம்.பி.பி.எஸ்., டி.பி.எச்., டி.ஐ.எச்., எம்.பி.ஏ. ஆகியோர் முன்னிலையில், அரசு அதிகாரிகள், சமூகப் பிரதிநிதிகள், பார்வையாளர்கள் மற்றும் பத்தர்கள் பங்கேற்ற நிலையில் இந்த முயற்சி தொடங்கி வைக்கப்பட்டது.

இந்தியாவின் மிகப்பெரிய கலாச்சார கூட்டங்களில் ஒன்றான வேளாங்கண்ணி திருவிழா, 11 நாட்கள் நடைபெறும் இந்த கொண்டாட்டத்தில் நாடு முழுவதிலும் வெளிநாடுகளிலிருந்தும் சுமார் 30 லட்சம் பக்தர்களை ஈர்க்கிறது. கிரீன்ஸ்வீப் திட்டம், திருவிழா நடைபெறும் பகுதி முழுவதும் ஒழுங்கமைக்கப்பட்ட சேகரிப்பு அமைப்பு மற்றும் தொடர்ச்சியான விழிப்புணர்வு நடவடிக்கைகள் மூலம், பயன்படுத்தப்பட்ட PET பாட்டில்களை பொறுப்புடன் சேகரிப்பதை ஆதரிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

திருவிழாவின்போது பயன்படுத்தப்பட்ட PET பாட்டில்களை பொறுப்புடன் சேகரித்து மறுசுழற்சி செய்வதை ஆதரிக்கும் வகையில், இந்த இயக்கம் ஒழுங்கமைக்கப்பட்ட சேகரிப்பு உள்கட்டமைப்பையும் களநிலை விழிப்புணர்வு நடவடிக்கைகளையும் இணைக்கிறது. வேளாங்கண்ணி வளைவு சந்திப்பு, வேளாங்கண்ணி கடற்கரை, வேளாங்கண்ணி கடற்கரை பூங்கா உள்ளிட்ட முக்கிய இடங்களில் 30–க்கும் மேற்பட்ட தன்னார்வலர்களும் தூய்மை பணியாளர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் பக்தர்கள் மற்றும் பார்வையாளர்களை நியமிக்கப்பட்ட சேகரிப்பு மையங்களைப் பயன்படுத்தவும், மூலநிலையிலேயே பிரிக்கும் பணியில் பங்கேற்கவும் ஊக்குவிப்பர். சேகரிக்கப்படும் பயன்படுத்தப்பட்ட PET பாட்டில்கள், பொறுப்புடன் கூடிய பொருள் மேலாண்மையை ஆதரிக்கும் வகையில், அங்கீகரிக்கப்பட்ட மறுசுழற்சி வழிகள் மூலம் அனுப்பப்படும்.

இந்த முயற்சியின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்த நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியர் திரு. கே. ஜே. பிரவீன் குமார், ஐ.ஏ.எஸ்., கூறுகையில், "வேளாங்கண்ணி திருவிழா தமிழ்நாட்டின் மிகப்பெரிய ஆண்டுவிழாக்களில் ஒன்றாகும், இது நாடு முழுவதிலும் வெளிநாடுகளிலிருந்தும் லட்சக்கணக்கான பக்தர்களை ஒன்றிணைக்கிறது. இந்த அளவிலான நிகழ்வின்போது உருவாகும் பயன்படுத்தப்பட்ட PET பாட்டில்களை நிர்வகிப்பதற்கு ஒருங்கிணைந்த முயற்சிகளும் மக்களின் தீவிர பங்களிப்பும் தேவை. தொடர்ந்து நடைபெறும் சேகரிப்பு மற்றும் பிரித்தல் முயற்சிகளை வலுப்படுத்துவதிலும், பயன்படுத்தப்பட்ட PET பாட்டில்களின் மறுசுழற்சியை ஊக்குவிப்பதிலும், வேளாங்கண்ணி சிறப்பு தர நகர பஞ்சாயத்து, ஹிந்துஸ்தான் கோகோ–கோலா பெவரேஜஸ், சங்கம் பிரதிஷ்டான், தன்னார்வலர்கள் மற்றும் தூய்மை பணியாளர்கள் ஆகியோரிடையே நடைபெறும் இந்த ஒத்துழைப்பை நான் பாராட்டுகிறேன். இது போன்ற முயற்சிகள், பெரிய பொதுக் கூட்டங்களின்போது அரசு, சமூக அமைப்புகள் மற்றும் தொழில்துறை ஆகியவற்றுக்கிடையிலான கூட்டாண்மைகள் எவ்வாறு பயனுள்ள கள சேகரிப்பு முயற்சிகளை ஆதரிக்கவும், பொறுப்புடன் கூடிய பயன்படுத்தப்பட்ட PET பாட்டில் மேலாண்மைக்கு பங்களிக்கவும் முடியும் என்பதை எடுத்துக்காட்டுகின்றன," என்றார்.

சேகரிப்பு முயற்சியை மேலும் வலுப்படுத்தும் வகையில், பயன்படுத்தப்பட்ட PET பாட்டில்களை பொறுப்புடன் சேகரிக்க வேண்டியதன் முக்கியத்துவத்தை உள்ளூர் மக்கள் மற்றும் பக்தர்களிடம் நேரடியாக கொண்டு சேர்க்க, பாரம்பரிய தமிழ் தெருக் கலை வடிவமான தெருக்கூத்தை இந்த முயற்சி பயன்படுத்துகிறது. தமிழ் பண்பாட்டிலும் கதை சொல்லும் மரபிலும் ஆழமாக வேரூன்றியுள்ள தெருக்கூத்து, பொதுமக்கள் விழிப்புணர்வுக்கு ஈர்க்கக்கூடிய, எளிதில் எட்டக்கூடிய ஊடகமாக விளங்குகிறது. உள்ளூர் கலைஞர்கள் தொடக்க விழாவின்போது நிகழ்ச்சி நடத்தினர்; திருவிழா முழுவதும் முக்கிய இடங்களில் தொடர்ந்து நிகழ்ச்சிகள் நடத்தி, பயன்படுத்தப்பட்ட PET பாட்டில்களை பொறுப்புடன் சேகரிப்பதிலும் அகற்றுவதிலும் பங்கேற்குமாறு பக்தர்களையும் பார்வையாளர்களையும் ஊக்குவிப்பர்.

இந்த முயற்சி குறித்து பேசிய சங்கம் பிரதிஷ்டானின் செயலாளர் கோமல் கக் நாடார், "வேளாங்கண்ணியின் ஆண்டுவிழா பல்வேறு சமூகங்களைச் சேர்ந்த மக்களை ஒன்றிணைக்கிறது, இது பயன்படுத்தப்பட்ட PET பாட்டில்களை பொறுப்புடன் சேகரிப்பதை ஊக்குவிக்க ஏற்ற தளமாக அமைகிறது. கிரீன்ஸ்வீப் மூலம், தன்னார்வலர்களை ஒருங்கிணைத்தல், விழிப்புணர்வு நடவடிக்கைகள் மற்றும் நியமிக்கப்பட்ட சேகரிப்பு மையங்கள் ஆகியவற்றின் மூலம் கள முயற்சிகளுக்கு நாங்கள் ஆதரவளிக்கிறோம். நாகப்பட்டினம் மாவட்ட நிர்வாகம் மற்றும் வேளாங்கண்ணி சிறப்பு தர நகர பஞ்சாயத்து அளித்த ஆதரவுக்காகவும், இந்த முயற்சியை கள மட்டத்தில் செயல்படுத்தும் வாய்ப்பை எங்களிடம் ஒப்படைத்த ஹிந்துஸ்தான் கோகோ–கோலா பெவரேஜஸிற்காகவும் நாங்கள் நன்றி தெரிவிக்கிறோம்," என்றார்.

தமிழகத்தில் HCCB நிறுவனத்தின் வலுவான கால்பதிப்பு மற்றும் சமூக ஈடுபாட்டை அடிப்படையாகக் கொண்டது இந்த முயற்சி. இந்நிறுவனம் திருவள்ளூர் மாவட்டம் நேமத்தில் அதிநவீன உற்பத்தி ஆலையை இயக்கி வருகிறது, மேலும் தனது முதன்மை சமூக கூட்டாண்மை திட்டமான ப்ராஜெக்ட் ஷைன் மூலம், சுகாதாரம் மற்றும் தூய்மை குறித்த விழிப்புணர்வு, கழிவு மேலாண்மை, பாதுகாப்பான குடிநீர் வசதி, மற்றும் பெண்கள் மற்றும் இளையோருக்கான திறன் மேம்பாட்டு திட்டங்கள் உள்ளிட்ட பல்வேறு சமூக சார்ந்த முயற்சிகளை மாநிலம் முழுவதும் தொடர்ந்து ஆதரித்து வருகிறது.

Printed by Dr.P.Pandiarajan, Printed at Raja Printers at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Published by Dr.P.Pandiarajan, at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Editor: Dr.P.Pandiarajan. TN/WPP-143/SR/2018-2020